Vani Vachakam

TAMIL

BOOK III

(FOR STANDARD III)

By

VIDYAN T. R. SRINIVASACHARIAR, B. A.,

(*Tamil Pandit, Sri M. Ct. Muthiah Chettiar's High School Purasawalkam*)

The Standard Publishers Ltd.,

49, BUNDER STREET,

MADRAS-1

Copyright]

[*Price As.*

Sixth Reprint: June 1953.

Approved by the Text-Book Committee Madras,
for class use.
Vide Page 22 of the Fort St., George Gazette, Part I
dated 12—5—53.

Printed at the Muthamil Press, Kanchi.

முகவுரை

இப்போதுள்ள பாடத்திட்ட முறையில், தாய்ப் பாஷையிலேயே எல்லா விஷயங்களையும் கற்பிக்க வேண்டும் என்று விதித்திருப்பதால், இனி மாணவர்கள் இளம்பருவத்திலிருந்தே தாய்ப்பாஷையில் பிழையற எழுதவும் படிக்கவும் போதுமான தேர்ச்சி பெறுவது இன்றியமையாததாகும். இளைஞர்கள் படித்தும் கேட்டும் தெரிந்து கொள்வதற்காக எழுதப்பட்ட விஷயங்கள், அவர்களுக்கு உற்சாகம் அளிக்கக் கூடியவையாய் இருத்தல் நன்று. அத்துடன் அவர்களுக்கு முன்னமே தெரிந்த விஷயங்களைச் சிறிது சிறிதாகப் போதிக்கவேண்டிய முறையில் ஆரம்பப் பாடசாலைத் திட்டம் ஏற்பட்டிருக்கிறது.

தவிர இப்புதிய பாடத்திட்டத்தில் மாணவர்களின் மௌனப் படிப்பு வற்புறுத்தப்பட்டுள்ளது. இப்போதே மௌனப் படிப்பு முறையில் அவர்கள் பழகினால்தான் பின்பு வர்த்தமானப் பத்திரிகை முதலியவைகளைப் படிப்பது எளிதாகும். ஆகவே, பிள்ளைகள் தாங்களே எளிதில் படித்து அறிந்துகொள்ளும்படியாகவும், வேகமாய்ப் படிக்கக் கற்றுக்கொள்ளும்படியாகவும், எளிய சொற்களையுடைய சிறு வாக்கியங்களே இந்த **வாணி வாசக** பாடங்களில் அமைக்கப்பட்டுள்ளன.

பாடங்களைக் கற்பிக்குமுன் உபாத்தியாயர்கள், அவ்வப்பாடங்களின் முதலில் கொடுக்கப்பட்டுள்ள சொற்களின்

வாணி வாசகம்

மூன்றும் புத்தகம்



1. வாழை மரம்

விதை	வெளி	இரண்டாம்	வடிந்து
கிழங்கு	தண்டு	நார்	அருந்து
குருத்து	முறை	சீவி	பயிராக்கு
விரியும்	பட்டை	பயன்	நடுவார்கள்
சுத்தம்	கிராமங்கள்	துளை	வழிப்போக்கர்
கண்ணாடி	முற்றி	பங்களா	உண்கலம்

1. வாழை மரம் உஷ்ண தேசங்களில் மட்டும் வளரும் ஒரு மரம். இது சாதாரணமாகக் கிராமங்களில் ஒவ்வொரு வீட்டுத் தோட்டத்திலும் இருக்கும். பட்டணங்களிலும், பங்களாத் தோட்டங்களில் இதை

வைத்துப் பயிராக்குவார்கள். இந்த மரத்தைக் கிளை யில்லாத மரம் என்றும் சொல்லுவது உண்டு.

2. வாழை மரத்துக்கு விதை இல்லை. இந்த மரத்தின் வேரில் உள்ள கிழங்கைப் பள்ளந்தோண்டிப் பூமியில் நடுவார்கள். நட்ட ஒரு மாதத்துக்கெல்லாம், அந்தக் கிழங்கிலிருந்து குருத்து வரும். பின்பு அது இலையாய் விரியும். ஆறு மாதங்களுள் வாழை ஒரு பெரிய மரமாய்விடும்.

3. இறுதியாக வாழையில் ஒரு சிறிய இலை வெளி வரும். அதற்குக் 'கண்ணாடி இலை' என்பது பெயர். பிறகு வாழைக்குலை வெளியே வரும். அந்தக் குலையின் நுனியில் பூவும், அடியில் காய்களும் இருக்கும். வாழைக்காய்கள் சீப்புச் சீப்பாய் இருக்கும். நாளடைவில் காய்கள் முற்றிப் பழுக்கும். பழுத்த பின் அந்த மரத்தை வெட்டிவிடுவார்கள். வாழை மரம் இரண்டாம் முறை குலை விடாது.

4. நாம் வாழை இலையை உண்கலமாக உபயோகிக்கிறோம். அதன் பூ, காய், தண்டு முதலியன் கறி சமைக்க உதவும். வாழைப் பட்டையைச் சீவி, அதிலும் சிலர் உண்பர். வாழை நார் பூக்கட்டப் பயன்படும். ஆகவே, வாழைமரத்தில் பயனற்ற பாகமே இல்லை.

5. வாழையில் பல வகை உண்டு: ஆப்பிரிக்காத் தேசத்தில் 'விசிறி வாழை' என்னும் ஒரு வித வாழை மரம் இருக்கிறது. அதன் இலைகள் விசிறியைப் போலவே அடுக்கு அடுக்காய் இருக்கும். அதன்

பட்டையில் சிறிது துளை செய்தால், அதன் வழியாய்ச் சுத்த ஜலம் வடிந்துகொண்டே இருக்கும். நீரில்லா ஊரின் வழியாகச் செல்லும் வழிப்போக்கர்கள் அந்த நீரைப் பிடித்து அருந்துவார்கள்.

வினாக்கள் :

1. வாழை மரம் எங்கு வளரும்?
2. வாழை மரம் எப்படி உண்டாகிறது?
3. 'கண்ணாடி இலை' என்பது என்ன?
4. குலை தள்ளிய மரத்தை ஏன் வெட்டிவிடுகிறார்கள்?
5. 'விசிறி வாழை' என்பது என்ன?
6. அது எப்படி உபயோகப்படுகிறது?

பயிற்சி :

1. பட்டணம், கிராமம், உஷ்ணமாக, பயனற்ற, உண்கலம், சுத்த ஜலம்—இவைகளைத் தனித்தனியாக அமைத்து வாக்கியங்கள் எழுது.

2. 'வாழைக் காய்கள் சிப்புச்சிப்பாய் இருக்கும்.' இது போல அடியிற்காணும் தொடர்களை அமைத்து வாக்கியங்கள் எழுது:—

கும்பல்கும்பலாக, கூறுகூறாக, படைபடையாக, திரள் திரளாக, அடுக்கு அடுக்காக, கட்டுக்கட்டாக.

3. மாமரத்தைப் பற்றி ஐந்து வாக்கியங்கள் எழுது.

2. 'நால்வரும் கேட்டால் கொடும்.'

அருகில்	நால்வர்	உணவு	அடைந்து
அயலூர்	உரத்து	அவ்வாறே	கட்டுச்சோறு
இழுத்து	காட்டு வழி	அப்புறம்	மூவரும்
பொறுமை	நியாயாதிபதி	போரிட்டு	முன்னமே
பணமுடிப்பு	வெட்கம்	பண்ணுதல்	ஒப்பிக்க

1. நான்கு பேர் கூடிக்கொண்டு ஒரு காட்டு வழியாக அயலூருக்குப் போயினர். வழியில் அவர்கள் ஒரு பணமுடிப்பைக் கண்டு எடுத்தார்கள். அதிலுள்ள பணத்தைப் பங்கிடுவதைப் பற்றி ஒருவரோடு ஒருவர் வழக்கிட்டனர். நெடுநேரம் போரிட்டும் அவர்கள் வழக்குத் தீரவில்லை.

2. ஆகவே, பணமுடிப்பை அந்த ஊரிலுள்ள ஒரு செட்டியாரிடம் கொடுத்து, 'நாங்கள் அருகிலுள்ள குளத்துக்குப் போய்க் கட்டுச்சோற்றைச் சாப்பிட்டுவிட்டு வருகிறோம். நாங்கள் நால்வரும் வந்து கேட்டால் இதைக் கொடும்,' என்று சொல்லிவிட்டு, நால்வரும் குளக்கரையில் உள்ள ஓர் ஆலமரத்தின் கீழ் அமர்ந்து உணவை உண்டனர்; அப்புறம் பணத்தைப் பற்றிப் பேச ஆரம்பித்தனர். பேசுவதற்கு முன் தம்முள் ஒருவனைச் செட்டியாரிடம் போய்ப் பணமுடிப்பை வாங்கி வரும்படி அனுப்பினர்.

3. அவன் செட்டியாரிடம் சென்று பண முடிப்பைக் கேட்டான். செட்டியார், 'மற்றவர்களும் வாராமல் நான் கொடுக்கமாட்டேன்,' என்றார். வந்தவன், 'ஆனால் சரி; நான் அவர்களைக்கொண்டு சொல்விக்கிறேன்,' என்று அவர்களை நோக்கி உரத்துக் கூப்பிட்டான். அங்கிருந்தே அவர்கள், 'கொடும். கொடும்,' என்று கூறினார்கள். அவ்வாறே செட்டியாரும் கொடுத்துவிட்டார். அவன் பணமுடிப்பை வாங்கிக்கொண்டு ஓடிப் போய்விட்டான்.

4. மூவரும் நெடுநேரம் காத்திருந்தனர். சென்றவனோ, திரும்பி வரவில்லை. மற்றவர் செட்டியாரிடம் வந்து, 'அவன் எங்கே?' என்று கேட்டனர். 'அவன் முன்னமே பணமுடிப்பை வாங்கிக்கொண்டு போய் விட்டானே!' என்று செட்டியார் பதில் கூறினார். 'ஓகோ! மோசம் பண்ணினீரே, செட்டியாரே! நாங்கள் நால்வரும் வந்து கேட்டால் கொடும் என்றோமே! நீர்

அப்படிச் செய்யவில்லையே! ஆகையால், எங்கள் முடிப்பை ஒப்பிக்க வேண்டும்,' என்றார்கள்.

5. செட்டியார் ஒன்றும் பதில் கூறவில்லை. உடனே அவர்கள், செட்டியாரை அந்த ஊர் நியாயாதிபதியிடம் இழுத்துச் சென்று, தங்கள் வழக்கைக் கூறினார்கள். அவர்கள் கூறியதை எல்லாம் பொறுமையாக நியாயாதிபதி கேட்டார். பிறகு அவர் சற்று யோசனை செய்தார். உடனே, 'நல்லது; வழிப்போக்கர்களே, நீங்கள் சொன்னபடியே நால்வரும் சேர்ந்து வந்து கேட்டால் செட்டியார் அந்தப் பணமுடிப்பைக் கொடுப்பார்,' என்றார். இதைக் கேட்ட வழிப்போக்கர் மூவரும் வெட்கம் அடைந்து தமது ஊருக்குப் போய்விட்டனர்.

வினாக்கள் :

1. வழிப்போக்கர் நால்வரும் என் போராடினர்?
2. அவர்கள் என்ன சொல்லிச் செட்டியாரிடம் முடிப்பைக் கொடுத்தார்கள்?
3. பண முடிப்பை வாங்கிவரச் சென்றவன் என்ன செய்தான்?
4. அவர்கள் வழக்கைக் கேட்டு நியாயாதிபதி என்ன சொன்னார்?
5. நியாயாதிபதி சொன்னதன் கருத்து என்ன?

பயிற்சி :

1. பணமுடிப்பு, போரிடுதல், இழுத்துச்செல், குளக்கரை- இவைகளைத் தனித்தனி வாக்கியங்களில் அமைத்து எழுது.
2. இந்தப் பாடத்தினால் நீ அறிந்துகொள்ளும் நீதியை எழுது.

3. என் வரலாறு

வரலாறு	காவலாளி	கிடப்பேன்	மேன்மை
பெற்று	மாடிமேல்	மோப்பம்	அறிவீர்கள்
தக்க	வாயில்	மனத்தால்	காப்பாற்று
பரமம்	ஏழை	அரண்மனே	பெற்றேர்
தீங்கு	உயிர்த்தோழன்	பிரபுவாக	வைதாலும்
பட்டினி	நன்றி	பிராணனே	அனுபவி
கூரை	வலிவு	வாஞ்சை	கடத்து
மேல் நாடு	மங்கை	பயமுறுத்து	செல்வர்கள்
சுருண்டு	முழுகியவர்	தோங்கு	தெரிவி
மாமிசம்	அகப்பட்டவர்	கிழித்து	வயது

1. சிறுவர்களே, என்னை நீங்கள் நன்ருக அறிவீர்கள். நான் உங்களுக்கு உயிர்த்தோழன். ஆனல், என் வரலாற்றை நீங்கள் முழுதும் அறிந்திருக்க மாட்டீர்கள். நான் உங்கள் வீட்டுக் காவலாளி; உங்கள் ஊர்க்கும் காவலாளியாய் இருக்கிறேன்.

2. உங்களுக்குத் தக்க வயது வரும் வரையில் பெற்றேர்கள் உங்களைக் காப்பாற்றுகிருர்கள். அவ்வளவு காலம் என்னை என் பெற்றேர் காப்பாற்றுவதில்லை. எனக்கு ஒரு மாதமான உடனே, நானே வெளியில் சென்று உணவைத் தேடிக்கொள்வேன்.

3. என் கால்கள் மிகவும் வலிவானவை. அவை களில் கூர்மையான நகங் கள் இருக்கின்றன. என் பற்களும் கூர்மையான வை. எனக்கு மோப்பசச் சத்தி உண்டு. மோப்பத் தால் நான் மனிதர்களை அறிந்துகொள்வேன்.



4. நான் மிகவும் நன்றி உள்ளவன். மற்ற மிருகங்கள், எஜமானன் தம்மிடம் எவ்வளவு அன்பாய் இருக்கிறானோ, அவ் வளவே அவனிடமும் அன்பு காட்டும். ஆனால், நானோ, எஜமானன் என்னை அடித்தாலும், வைதா லும், பட்டினி போட்டாலும், அவன் பின்னாலே செல்வேன். நான் அவனுக்கு ஒரு தீங்கும் நினைக்க மாட்டேன்.

5. என் எஜமானன் ஏழையாகி உணவில்லாமல் கஷ்டப்பட்டாலும், நான் அவனைப் பிரியமாக நினைத்துக் காப்பேன். நான் பசி தாகமும் பாராமல் அவனுடனே செல்வேன். அவனுடன் எல்லாக் கஷ்டங்களையும் அனுபவிப்பேன்; பல சமயங்களில் என் பிராணனை விட்டும் எஜமானனைக் காப்பாற்று வேன். இந்த நாட்டில் மக்கள் என்னை அவ்வளவு உயர்வாக நடத்துவதில்லை. மேல் நாடுகளில் நான் மிகவும் மேன்மை பெற்று இருக்கிறேன்.

6. நான் நீரில் முழுகியவர்களைக் காப்பாற்றியிருக்கிறேன்; நெருப்பில் அகப்பட்டவர்களையும் காப்பாற்றியிருக்கிறேன். பெரிய ஆட்டு மந்தைகளை நான் ஒருவனாகவே காப்பேன். என்னைச் சேர்ந்தவருள் ஆயிரக்கணக்கான ரூபாய் மதிப்பு உள்ளவரும் சிலர் இருக்கின்றனர்.

7. நான் செல்வர்களின் அரண்மனை மாடியிலும் படுப்பேன்; பரம ஏழைகளின் கூரை வீட்டு வாயிலிலும் கிடப்பேன். என்னை நேசிக்காதவர் ஒருவரும் இலர்.

8. நான் சோறு, மாமிசம் இரண்டும் உண்பேன். எனக்குக் கூர்மையான வளைந்த பற்கள் இருப்பதால், மாமிசத்தை என்னால் கிழித்துத் தின்ன முடியும்.

9. எனது வால் எப்போதும் வளைந்திருக்கும். எனக்குச் சந்தோஷம் உண்டானால், நான் வாலை ஆட்டி அதைத் தெரிவிப்பேன்.

10. என் பெயர் நாய் என்பதை நீங்கள் இதற்குள் அறிந்திருப்பீர்கள்.

வினாக்கள் :

1. நாயின் குணத்தைப்பற்றி ஐந்து வாக்கியங்கள் எழுது.
2. நாயின் நகமும் பற்களும் எப்படி இருக்கின்றன ?
3. நாயைப்போன்ற வேறு ஒரு வீட்டுப் பிராணியைச் சொல்லு.

பயிற்சி:

1. பூனையைப்பற்றிப் பத்து வரிகள் எழுது.

2. பூனைக்கும் நரிக்கும் உள்ள வித்தியாசங்களைப் பற்றி உனக்குத் தெரிந்த வரையில் எழுது.

3. கோடிட்ட இடங்களில் சரியான பதங்களை நிரப்பு :—

ஒரு நாய் தன் வாயில்——துண்டைக் கவ்விக்கொண்டு போயிற்று. வழியில் ஒரு நீர் ஓடை——அந்த ஓடையைக்—— ஒரு பாலம் உண்டு. பாலத்தின்மேல் நாய்——சென்றது. அப்போது நீரில் எட்டிப்——நீரில் அதன்——தெரிந்தது. தன் நிழலை வேறு ஒரு——என்று நினைத்தது. அந்த நீரில் தோன்றிய நாயின் ——ரொட்டித் துண்டைப் பிடுங்கத் தன் வாயைத் திறந்தது. உடனே தன் வாயிலுள்ள——நீரில்——அடித்துக்கொண்டு—— போயிற்று. அதிக ஆசை அதிக—.

4. தபால்

கடிதம்	போடப்பட்டது	உறை
தபாலாபீஸ்	ஒட்டின	தபாற்பெட்டி
தபாற்காரர்	கையெழுத்து	மேல் விலாசம்
பிரிக்காமல்	சிட்சை	விலாசதார்
முத்திரை	தேதி	தபாற்பில்லை

சகுந்தலை: அப்பா, உங்களுக்கு ஒரு கடிதம் வந்திருக்கிறது.

தகப்பனார்: சகுந்தலை, எங்கே? கொடு.

சகுந்: என்ன அப்பா, உறையைப் பிரிக்காமல் மேலே ஏதோ பார்க்கிறீர்களே?

தகப்: எந்த ஊரிலிருந்து கடிதம் வந்திருக்கிறது என்பதைப் பார்க்கிறேன்.

சகுந்: அது, உள்ளே இருக்கும் கடிதத்தைப்பார்த்தால் அல்லவா தெரியும்? மேலே எப்படித்தெரியும்

தகப் : உறையின்மேல் தபாலாபீஸ் முத்திரை இருக்கிறது. அதிலிருந்து தெரியும்.

சகுந் : எதற்கு அப்பா, தபாலாபீஸில் முத்திரை போடுகிறார்கள்?

தகப் : நாம் கடிதத்தைத் தபாற்பெட்டியிற்போட்டால், அதைத் தபாற்காரர் தபாலாபீஸுக்குக் கொண்டு போவார்; அங்கு, நாம் ஒட்டி இருக்கும் பில்லையின்மேல் தபாலாபீஸின் முத்திரையை அடித்துவிடுவார். முத்திரையில் அந்த ஊரின் பெயரும், முத்திரை போட்ட தேதியும் இருக்கும். முத்திரையிலிருந்து எந்த ஊரில் அந்தக் கடிதம் போடப்பட்டது என்பது நமக்குத் தெரியும்.

சகுந் : ஆனால், நாம் ஒட்டின பில்லை கெட்டுப்போய்விடுமே? நாம் அதை மறுபடியும் உபயோகிக்கக் கூடாதா?

தகப் : குழந்தாய், ஒருபோதும் உபயோகிக்கக்கூடாது. உபயோகித்தால் சிட்சையாய்விடும்.

சகுந் : உறைக்குப் பின் பக்கத்தில் ஒரு முத்திரை போட்டிருக்கிறதே! அது என்ன அப்பா?

தகப் : அது நமது ஊரின் முத்திரை.

சகுந் : இந்த ஊரின் முத்திரையை எதற்குப் போடுகிறார்கள்?

தகப் : இங்குத் தபால்கள் வந்ததும், அவைகளின் மேல் இந்த ஊரின் பெயரும், வந்த தேதியும் உள்ள ஒரு முத்திரையை அடிப்பார்கள்.

சகுந்: அப்புறம் கடிதத்தை என்ன செய்வார்கள்?

தகப்: அப்புறம் தபாற்காரரிடம் கொடுத்துவிடு-வார்கள். தபாற்காரர் மேல் விலாசத்தைப் பார்த்து, அதன்படி கடிதத்தை விலாசதாரிடம் கொடுத்துவிடுவார்.

சகுந்: ஆனல், தபாற்காரர் உங்களிடம் கொடுக்காமல் கடிதத்தை என்னிடம் கொடுத்துவிட்டாரே!

தகப்: இது சாதாரணக் கடிதம். ஆகையால், விலாச-தாருடைய வீட்டில் உள்ள யாரிடமும் இதைக் கொடுத்துவிடலாம். ரிஜிஸ்தர் கடிதமானல், விலாசதாரிடமே கொடுத்துக் கையெழுத்து வாங்க வேண்டும்.

சகுந்: அது ஏன் அப்பா?

தகப்: குழந்தாய், அதைப்பற்றி வேறு ஒரு நாள் உனக்குச் சொல்லுகிறேன்.

பயிற்சி:

1. தபாலாபீஸைப் பற்றி ஐந்து வாக்கியங்கள் எழுது.

2. ஸ்டாம்ப், முத்திரை, உறை, விலாசதார் — இவைகளை அமைத்துத் தனித்தனி வாக்கியங்கள் எழுது.

3. நீ உன் ஊரிலுள்ள தபாலாபீஸுக்குப் போய்ப் பார். அங்குச் சிவப்பு அட்டைகள் தொங்கவிட்டிருப்பதைக் கவனி. அவைகளில் என்ன எழுதியிருக்கிறது என்பதைக் குறித்துக் கொண்டு வா.

5. கிளி

நாடு	அர்த்தம்	வழங்கு
கோதி	பஞ்சவர்ணம்	மழலை
சகஜமாக	இறகு	கோச்சை
மரப்பொந்து	சமாசாரம்	ஒப்பாக
தன்னிச்சை	அலகு	கிளிப்பிள்ளை
உடைத்து	நாக்கு	காட்சிச்சாலை
வளர்	அடைத்து	ஊன்று

1. காடுகளில் கிளிகள் கூட்டங்கூட்டமாய் வசிக்கும். நாடுகளிலும் அவை மரப்பொந்துகளில் வசிக்கும். கிளிகள் பல நிறங்கள் உள்ளவை சாதாரணமாக நாம் பார்க்கக் கூடியது பச்சைக் கிளியே. பஞ்சவர்ணக்கிளி என்ற ஒருவகைக் கிளி உண்டு அதைக் காட்சிச் சாலைகளில் நாம் காணலாம்.

2. கிளி பறவை இனத்தைச் சேர்ந்தது. ஆகையால், அதற்கு இறகுகள் உண்டு. அது அதிக உயரம் பறவாது. கிளியின் பாதங்களில் விரல்கள் இருக்கும். அவைகளால், அது கிளைகளை உறுதியாகப் பிடித்துக்கொள்ளும்.

3. கிளி பழுத்த பழங்களைக் கோதி உண்ணும். அது உண்ணும்போது ஒரு காலை ஊன்றிக்கொண்டு

மற்ெருரு காலால் பழத்தை எடுத்துத் தின்னும். கிளிக்குக் கூர்மையான அலகு இருக்கிறது. அதனல், அது கொட்டைகளையும் உடைத்துத் தின்னும். அதன் அலகு சிவப்பு நிறமுடையது.

4. சாதாரணமாகப் பக்ஷிகளுக்கு நாக்கு இல்லை. ஆனல், கிளிக்குமட்டும் நாக்கு உண்டு. அதனலேதான் கிளிக்குப் பேச முடிகிறது. மனிதர்கள் பேச்சுக் கற்றுக் கொடுத்தால், அதைக் கிளி திருப்பிச் சொல்லும். மொழிகளை அது அர்த்தம் தெரிந்து சொல்வதில்லை. இது பற்றியே, 'சொன்னதைச் சொல்லும் கிளிப்பிள்ளை,' என்னும் பழமொழி வழங்குகிறது.

5. கிளியின் பேச்சுக் கொச்சைப் பேச்சாய் இருக்கும். சிறு குழந்தைகளின் மழலை வார்த்தைகளைக் கிளியின் வார்த்தைகளுக்கு ஒப்பாகக் கூறுவார்கள். கிளி தன்னிச்சையாய்க் காட்டில் வாழும் ஒரு பறவை. அதைப் பிடித்துக் கூட்டில் அடைத்து வைப்பது மிகவும் பாவம்.

6. சிலர் கிளியின் அழகுக்காக, அதைப்பிடித்துக் கூண்டில் வைத்து வளர்க்கின்றனர். கிளி, வளர்ப்பவர்களுடன் சகஜமாகப் பழகும். சில தேசங்களில், கிளிகள் ஒரிடத்திலிருந்து மற்ருேர் இடத்துக்குச் சமாசாரத்தைக் கொண்டு போகின்றன என்றும் சொல்லுகிருர்கள்.

வினுக்கள் :

1. *கிளிகள் எங்கு வசிக்கும்?*
2. *நாம் சாதாரணமாகக் காணும் கிளி எது?*

3. கிளி மனிதனைப்போல என்ன செய்கிறது?
4. அலகினால் கிளிக்கு என்ன உபயோகம்?
5. பறவைகளில் கிளிக்கு மட்டும் ஏன் பேச முடிகிறது?
6. சில தேசங்களில் கிளிகள் என்ன செய்கின்றன?

பயிற்சி :

1. காக்கையைப்பற்றி ஐந்து வாக்கியங்கள் எழுது.
2. இந்தப் பாடத்தில் எத்தனை பந்திகள் (பாராக்கள்) இருக்கின்றன? (ஒரு பத்தி என்பது ஒரு விஷயத்தைப்பற்றிச் சொல்லும் பல வாக்கியங்கள் கொண்டது.)
3. ஒவ்வொரு பத்தியிலும் எத்தனை வாக்கியங்கள் இருக்கின்றன?
4. முதற்பத்தியில் எத்தனை பதங்கள் இருக்கின்றன? (ஒரு பதம் என்பது,ஒரெழுத்துத் தனித்தாவது அல்லது பல எழுத்துக்கள் சேர்ந்தாவது அர்த்தம் தருவதாகும். அதை வார்த்தை என்றும்,மொழி என்றும், சொல் என்றும் சொல்லுவது உண்டு.)

6. மூடனுடன் சேர்க்கை முதலுக்கே மோசம்.

அடுத்த	செல்லும்	இடறினன்
அரைத்துணி	பிரயாணம்	சேர்க்கை
கைக்கொண்டனர்	நிசியில்	முடித்து
கெட்டியாக	கூட்டி	கெடுதி
	இருட்டு	

1. தென்னாட்டில் குற்றாலம் என்ற ஓர் ஊர் இருக்கிறது. அந்த ஊருக்குப் பக்கத்தில் அடர்ந்த காடு



உண்டு. அந்தக் காட்டின் வழியாக ஒரு மூடனும், ஒரு வியாபாரியும் சாமான் வாங்க அடுத்த ஊருக்குப் பிரயாணம் செய்தனர்.

2. மூடனிடம் ஐந்து ரூபாய் இருந்தன. அவன் அவைகளைத் தன் அரைத் துணியில் கெட்டியாக முடிந்து வைத்திருந்தான். வியாபாரியிடமும் நூறு ரூபாய் இருந்தன. அவர்கள் செல்லும்போது பாதி வழியில் இருட்டிவிட்டது. அப்போது மூடன் நடு வழியில் குறுக்கே படுத்துக்கொண்டு உறங்கிவிட்டான். வியாபாரி, அருகில் உள்ள ஒரு செடியின் மறைவிற் படுத்துக்கொண்டான்.

3. நடு நிசியில், சில திருடர்கள் ஒன்று சேர்ந்து அயலூரில் திருடுவதற்காக அவ்வழியே சென்றார்கள். இருட்டினால் மூடன் படுத்திருந்தது அவர்களுக்குத் தெரியவில்லை: அவன் வழியில் படுத்திருந்ததால் அவனைத் திருடர்களுள் ஒருவன் காலால் இடறினான்.

4. அப்படி இடறினவன் மூடனை ஒரு மரக் கட்டை என்று நினைத்து, "இது என்ன? வழியில் மரக்கட்டை ஒன்று கிடக்கிறதே!" என்றான்: மூடனுக்கு அறிவு ஏது? தன்னைத் திருடனே அறியாத போது, தான் சும்மா இருக்கவேண்டும் அல்லவா? அப்படி இராமல் மூடன் கோபத்துடன், "போ போ! உங்கள் வீட்டு மரக்கட்டை ஐந்து ரூபாய் முடிந்துகொண்டும் படுத்திருக்குமோ?" என்றான். உடனே திருடர்கள் அவனைப் பிடித்து, அவன் முடிந்து வைத்-

திருந்த ஐந்து ரூபாயையும் பிடுங்கிக்கொண்டு சென்றுர்கள்.

5. அவர்கள் போகும்போது ஒரு ரூபாயை எடுத்து, "இந்த ரூபாய் செல்லுமா, செல்லாதா?" என்று பேசிக்கொண்டார்கள்: இதைக்கேட்ட மூடன், "என்ன ஐயா, என் காசு அப்படிப்பட்டதா? வேண்டு-மானுல் செல்லுஞ்செல்லாததற்கு, இதோ செட்டியார் செடியின்கீழ் இருக்கிருர். அவரிடம் காட்டுங்கள்," என்று வியாபாரி இருக்கும் இடத்தைச் சுட்டிக் காட்டிச் சொன்னுன்.

6. உடனே திருடர்கள் வியாபாரியையும் கண்டு பிடித்து அவனிடமிருந்த நூறு ரூபாயையும் கைக் கொண்டனர். இதனுல் மூடனுடன் சேர்ந்தால் கட்டா-யம் கெடுதி வரும் என்பது தெரிகிறதல்லவா?

விஞக்கள்:

1. மூடன் எங்குப் படுத்துக்கொண்டான்?
2. திருடருள் ஒருவன் என்ன சொன்னுன்?
3. மூடன் தனது மூடத்தனத்தை எப்படி வெளியாக்கினுன்?
4. செட்டிக்குக் கடைசியில் என்ன கதி ஆயிற்று?
5. இந்தக் கதையால் நீ என்ன தெரிந்துகொள்கிருய்?

பயிற்சி:

1. அடியிற்காணும் பதங்களைப் பிரித்து எழுது:—

(உ-ம்) படுத்திருக்குமா = படித்து + இருக்குமா.

அயலார் =

வேண்டுமானுல் =

அவனிடமிருந்து =

2. பின் வரும் வாக்கியங்களை ஒன்று சேர்த்து எழுது:—
கிளி மரப் பொந்துகளில் வசிக்கும்.
கிளி காடுகளில் வசிக்கும்.

(உ-ம்) கிளி மரப்பொந்துகளிலும் காடுகளிலும் வசிக்கும்.

1. இராமன் பள்ளிக்கூடம் போனான்.
கோவிந்தன் பள்ளிக்கூடம் போனான்.

2. பந்தலில் பாகற்காய் காய்க்கிறது.
பந்தலில் புடலங்காய் காய்க்கிறது.

3. தாயார் ஊருக்குப் போனார்.
தகப்பனார் ஊருக்குப் போனார்.

4. காட்டில் சிங்கம் வசிக்கும்.
காட்டில் புலி வசிக்கும்.

7. உழவு

பெயர்க்கும்-	பெறுவான்	சமப்படுத்து
கலப்பை	பிளவு	பதப்படுத்து
முக்கியமாக	பெரும்பான்மை	துண்டு
காறு	படைச்சால்	பாய்ச்சு
உழவன்	செழிப்பாக	கோடி
அழுத்து	எருது	கருவி
சேறு	பிடி	கடமை
புழுதி	நீள வாட்டம்	பரம்படித்தல்

1. நமது நாட்டில் உள்ளவருள் பெரும்பான்மை-யோர் என்ன தொழில் செய்கின்றனர் தெரியுமா? அவர்-

கள் செய்வது உழவுத்தொழில்தான். நிலத்தை உழுது பயிர் செய்வதே இந்தியருக்கு முக்கியமான தொழிலாகும். உழவுக்கு முக்கியமாக வேண்டுவன எவை? ஒரு கலப்பையும் இரண்டு எருதுகளுமேயாகும். ஆகையால், எருதுகளை வைத்துக் காப்பாற்றுவது அவர்களுக்கு முக்கியமான கடமையாகும்.

2. கலப்பை என்பது நிலத்தை உழுவதற்குப் பயன்படும் கருவி. அதன் நுனியில் கூர்மையான ஓர் இரும்புத்துண்டு இருக்கும். அதைக் காறு என்று சொல்லுவார்கள். கலப்பையை மாடுகள் இழுத்துச் செல்லும் போது, உழவன் அதைச் சிறிது பூமியில் அழுத்துவான். அப்போது பூமியில் காறு ஆழமாக ஊன்றி மண்ணைப் பெயர்க்கும்.

3. உழவன் நிலத்தை ஒரு மூலையிலிருந்து உழ ஆரம்பிப்பான். உழும்போது நிலத்தில் பள்ளமாகப் பிளவு விழும். அந்தப் பிளவுக்குப் படைச்சால் என்பது

பெயர். நிலத்தின் ஒரு கோடியிலிருந்து மற்றொரு கோடிக்குச் சென்றதும் மறுபடியும் உழவன் திரும்பிப் படைச்சாலின் பக்கமாக உழுது வருவான். இவ்விதம் நிலத்தை நீள வாட்டத்தில் உழுத பிறகு மாடுகளைக் குறுக்காக ஓட்டி உழுவான். அப்பொழுதுதான் நிலம் முழுதும் நன்றாக உழப்பட்டுப் புழுதியாகும்.

4. நிலத்தை உழவன் எவ்வளவு ஆழமாக உழுகிறானோ, அவ்வளவு அவன் நிலத்திலிருந்து பயன் பெறுவான். 'அகல உழுவதைவிட ஆழ உழு,' என்பது ஒரு பழமொழி. ஐரோப்பா முதலிய தேசங்களில் மாடுகளுக்குப் பதிலாகக் குதிரைகளைக் கட்டி நிலத்தை உழுவார்கள்.

5. நிலத்தில் பயிர் செய்வதற்குமுன், அதை நன்றாகப் பதப்படுத்தினால்தான் பயிர் செழிப்பாக வளரும். இதற்காகவே உழவன் நிலத்தை நன்றாக உழுவான்; பிறகு அதில் எருப்போடுவான்; அப்புறம் நீர் பாய்ச்சுவான். அப்போதுதான் நிலம் சேறாகும்.

6. சேறானதும், உழவன் நிலத்தைச் சமப்படுத்துவான்; சமப்படுத்தப் பரம்புச் சட்டம் என்ற கருவியை உபயோகிப்பான். இதையே 'பரம்படித்தல்' என்பார்கள். இந்தச் சட்டமானது நீண்ட பிடியுள்ள ஒரு பலகை. அப்படி நிலத்தை உழுது பரம்பு அடித்த பிறகே உழவன் விதை விதைப்பான்; அல்லது நாற்று நடுவான்.

வினாக்கள் :

1. இந்தியர்களின் முக்கியமான தொழில் என்ன?
2. அந்தத் தொழிலுக்கு அவசியம் தேவையானவை எவை?
3. 'காறு' என்பது எதற்குப் பெயர்?
4. 'படைச்சால்' என்பது என்ன?
5. நிலத்தைச் சமப்படுத்துவதற்கு வேறு பெயர் என்ன?

பயிற்சி :

I. அடியிற்காணும் வாக்கியங்களை இரண்டு வாக்கியங்களாகப் பிரித்து எழுது :—

(உ–ம்) உழவுக்கு ஒரு கலப்பையும் இரண்டு எருதுகளும் தேவை. உழவுக்கு ஒரு கலப்பை தேவை; இரண்டு எருதுகள் தேவை.

1. வேப்பிலை மந்திரிப்பதற்கும் மருந்துக்கும் உதவும்.
2. நிலத்தை உழவர்கள் குறுக்காகவும் நெடுக்காகவும் உழுவார்கள்.
3. கிளி பேசுவது இனிமையாகவும் ஆச்சரியமாகவும் இருக்கும்.
4. தேகப்பயிற்சி செய்தல் உடம்புக்கும் மூளைக்கும் நல்லது
5. வீட்டைச்சுத்தம்செய்தால் அழுக்கும் நோயும் தொலையும்
6. ஆடுகள் ஒன்றோடு ஒன்று சண்டையிட்டு முட்டிக் கொள்ளும்.

II. சமப்படுத்து, காப்பாற்று, நீர் பாய்ச்சு—இவைகளை வாக்கியங்களில் அமைத்து எழுது.

III. பின் வரும் வாக்கியங்களை ஒழுங்குபடுத்தி எழுது :—

1. ஆடுகள் உள்ள மரங்களில் எல்லாமேயும் தழைகளையும்.
2. துள்ளித் துள்ளி காடுகளில் மான் விளையாடும்.
3. வெளுப்பான் வைத்து துணிகளை வெள்ளாவி வண்ணான்.
4. உடம்புக்கு உருண்டை உண்பது நாம் வேப்பிலை நல்லது.

8. பெயர்ச்சொல்

அழை	சுலபம்	வாக்கியம்
ஒவ்வொரு	தனித்தனி	பேர் இட்டு
சாதுவான	பெட்டைக்கோழி	

1. நம்மை முன் அறியாதவன் ஒருவன் கண்டால் என்ன கேட்கிறான்? 'நீ யார்? உன் பெயர் என்ன?' என்று கேட்கவில்லையா? அதற்கு நாம் என்ன பதில் சொல்லுவோம்? 'நான் மாணவன். என் பெயர் கோவிந்தன்,' என்று பதில் கூறுவோம் அல்லவா? அது போல உலகத்திலுள்ள ஒவ்வொரு பொருளையும் நாம் தெரிந்துகொள்வதற்குத் தனித்தனி ஒவ்வொரு பெயர் வைத்திருக்கிறோம்.

2. அவற்றுள் சில பெயர்களுக்குக் காரணம் உண்டு; சில பெயர்களுக்குக் காரணம் இல்லை. மரம், கல், புலி, நாய், நாற்காலி, வாணி என்று உயிரில்லாத பொருளுக்கும் உயிருள்ள பொருளுக்கும் நாம் பெயர் வைத்திருக்கிறோம் அல்லவா? ஆகையால், இப்பெயர்களுள் ஒவ்வொன்றும் ஒரு பெயர்ச்சொல் ஆகும்.

3. நாம் பொருள்களுக்கு வழங்கும் ஒவ்வொரு பெயரும் பெயர்ச்சொல். இப்பொழுது பெயர்ச்சொல்லைக் கண்டுபிடிப்பது உங்களுக்குச் சுலபமாய்விட்டதல்லவா? ஆகையால், பின்வரும் வாக்கியங்களிலுள்ள பெயர்ச்சொற்களை மட்டும் எடுத்து எழுதுங்கள்.

1. நெல் நிலத்தில் விளையும்.
2. புலி காட்டில் வசிக்கும்.
3. பசு சாதுவான மிருகம்.
4. நாய் வீட்டைக் காக்கும் பிராணி.
5. உஷ்ண தேசத்தில் தென்னை மரம் அதிகம்.
6. கிட்டு, புதுப்பலகை வாங்கினான்.
7. வாணி, தரையில் கோலம் போடுகிறாள்.
8. நீ காலையில் காற்றாடி விடாதே.
9. உண்பதற்குமுன் கைகால்களைச் சுத்தம் செய்.
10. பெட்டைக்கோழி முட்டை இடும்.

பயிற்சி:

அடியிற்காணும் வாக்கியங்களில் கோடுள்ள இடத்தில் தகுந்த பெயர்ச்சொல்லை அமை:—

1. ——மேல் கூரை இருக்கிறது.
2. ——வீட்டைக் காக்கும் மிருகம்.
3. ஏர் உழுவதற்கு ——உதவும்.

4. நீ வாங்கின——தின் விலை என்ன?
5. ——தின்னும் பண்டம் என்ன?
6. இராமன் வீட்டில்——களவு செய்தார்கள்.
7. போலீஸ்காரன்——னை அடித்தான்.
8. ——ல் வெள்ளம் அதிகம் வந்தது.
9. ——மலை உலகத்தில் உயர்ந்த மலை.

9. ஆராயாது சிநேகம் செய்தல்

திரிதல்	பொறாமை	இசைந்தது
மித்திரன்	குறுந்தடி	பாவி
விரதம்	சந்தோஷம்	கொல்லைக்காரன்
அறிமுகம்	குறி	எறி
யுத்தி	நிறைவேற்று	தீண்ட
புதர்	ஒளிந்து	நீக்கு
வருந்தியது	செத்தவன்	கொத்துவது
தப்பி	அவிழ்	மான்
கபடம்	சௌக்கியம்	தடுக்காதே
இளமை	மேய்ந்து	சைகை
	ஆராயாது	

1. ஒரு காட்டில் ஒரு மானும் ஒரு காக்கையும் மிகவும் சிநேகமாய் இருந்தன. மான் புல்லைத் தின்று கொழுத்திருந்தது. அதைப்பார்த்த ஒருநரி பொறாமை கொண்டு, அந்த மானைக் கபடத்தினால் கொல்ல நினைத்தது.

2. ஒரு நாள் நரி மானிடம் வந்து, “ மானே. நீ சௌக்கியமா ? ” என்று கேட்டது. அது கேட்ட மான், “ நீ யார் ?” என்றது. “ நான் துணையற்ற ஒரு பாவி. இக்காட்டில் தனியாகத் திரிந்துகொண்டிருக்கிறேன். உன்னைப் பார்க்க எனக்குச் சந்தோஷமாயிருக்கிறது. ஆகையால், நான் இனி உனக்கு வேலை செய்துகொண்டிருப்பேன், ” என்று நரி கூறிற்று. மானும் அதற்கு இசைந்தது.

3. அன்றிரவு மான், காகம் இருந்த மரத்தடியில் வந்து தன் சினேகிதனான நரியைக் காகத்துக்கு அறிமுகப்படுத்தியது. காகம் மானைப்பார்த்து, ‘முன்பின் தெரியாத ஒருவனுடன் சினேகம் செய்யக் கூடாது. ஆகையால், ஜாக்கிரதையாயிரு,’ என்றது. மான், “ அதனால், என்ன ? உன்னைப் போலவே இந்த நரியும் எனக்குச் சினேகமாய் இருக்கட்டும். இதைத் தடுக்காதே, ” என்று சொல்லி நரியைத் தன்னிடம் வைத்துக்கொண்டது.



4. இவ்விதம் இருக்கையில் ஒரு நாள் நரி மானைப் பார்த்து, “ மித்திரா, இந்தக் காட்டில் வளமான பயிர்கள் இருக்கின்றன. உனக்குக் காட்டுகிறேன் வா, ”

என்று சொல்லி மானை அழைத்துச் சென்று காட்டிற்று. நரி காட்டின பயிரை மான் தினந்தோறும் சென்று மேய்ந்து வந்தது. அவ்விதம் ஒருநாள் மான் மேய்ந்துகொண்டிருப்பதைப் பார்த்த கொல்லைக்காரன் அதைப் பிடிக்க அவ்வயலின் பக்கத்தில் வலை கட்டினான். மான் வழக்கப்படி போய் மேயும் போது அந்த வலையில் சிக்கிக்கொண்டது.

5. அப்போது நரி அங்கு வந்து மானைப் பார்த்து, "இன்று நம் எண்ணம் நிறைவேறிற்று!"

என்று நினைத்தது. மான் தன்னைவலையிலிருந்து விடுவிக்கும்படி நரியை வேண்டிற்று. நரி, "இன்று எனக்கு விரத தினம். தோல் வலையைத் தொட மாட்டேன். நாளைக்கு இதை அறுத்து உன்னை விடுவிப்பேன்," என்று கூறிவிட்டு அருகிலுள்ள ஒரு புதரில் ஒளிந்துகொண்டது.

6. சிறிது நேரத்துக்குள் காகம் அங்கு வந்தது. மான், காகத்தைப் பார்த்து, "உன் வார்த்தையைக் கேளாததால் எனக்கு இந்தத் துன்பம் வந்தது," என்று கூறி வருந்தியது. அதற்குள் கொல்லைக்காரனும் அவ்விடம் வந்துவிட்டான். அப்போது காகம்

மானைப் பார்த்து, "சிநேகிதா, இப்போது கொல்லைக்காரன் உன்னைப் பார்த்தால் அடித்துக் கொன்றுவிடுவான். ஆகையால், நீ செத்தவன் போலப் படுத்திரு. நான் பிணத்தைக் கொத்துவதுபோல உன்னைக் கொத்திக்கொண்டிருக்கிறேன். அப்போது நீ இறந்துவிட்டாய் என்று நினைத்து முதலில் அவன் வலையை அவிழ்த்துவிடுவான். அவிழ்த்துவிட்டதும் நான் கத்திச் சைகை செய்வேன். உடனே நீ ஓடிப் போய்விடு," என்று யுத்தி சொல்லிற்று.



7. அப்படியே காகம் செய்ய, மான் தப்பி ஓடிற்று. ஓடுகையில் அதன் மேல் கொல்லைக்காரன் ஒரு குறுந்தடியை வீசி எறிந்தான். அது குறி தப்பிப் பக்கத்துப் புதரில் ஒளிந்திருந்த நரியின்மேல் விழ, நரி இறந்தது.

8. ஆகையால், ஆராய்ந்து பார்த்தே ஒருவருடன் சிநேகம் செய்யவேண்டும். அல்லாவிட்டால், ஆபத்து நேரிடும்.

வினாக்கள் :

1. காகம் நரியைப் பற்றி மானிடம் என்ன சொல்லிற்று ?
2. நரி எதற்காக மானுடன் சிநேகம் செய்தது ?
3. நரி தன் எண்ணத்தை முடிக்க என்ன உபாயம் செய்தது?
4. மான் வலையிற் சிக்கியபோது நரி என்ன சொல்லிற்று ?
5. காகம் எப்படி மானை வலையிலிருந்து விடுவித்தது ?
6. இந்தப் பாடத்தால் நீ என்ன தெரிந்துகொள்ளுகிறாய்?

பயிற்சி :

I. கீழ்க்காணும் வாக்கியங்களில் கோடிட்ட இடங்களில் சரியான பதங்களை எழுதிப் பூர்த்தி செய் :—

1. மான் நரியை அழைத்து வந்து காக்கைக்கு——
2. மான் இறந்தது போலப் பூமியில்——
3. நாற்று நடுவதற்கு முன் நிலத்தை——
4. வாழை மரத்தின் வேரிலிருந்து கீழ்க்கன்று——
5. வேப்பமரக் காற்று உடம்புக்கு——
6. பூனையைக் கண்டால் கிளி——
7. வகுப்புக்கு உபாத்தியாயர் வந்ததும் நான்——
8. வீதிகளில் குறுக்கே வேகமாகப்——
9. விடியற்காலையில் எழுந்திருப்பது——

II. கொழுத்திருந்தது, அறிமுகப்படுத்தல், துணையற்ற, பொறுமை—இவ்வகளை அமைத்து வாக்கியங்கள் எழுது.

III. இப்பாடத்தில் வந்துள்ள ஐந்து பெயர்ச்சொற்களைக் கூறு.

10. பொன் மொழிகள்

இல்லாள்	ஆக்கம்	ஓதாத
ஈயார்	தேட்டை	வேலும்
சீர்	கோட்டாவி	தீயார்

1. அகத்தின் அழகு முகத்தில் தெரியும்.
2. ஆலும் வேலும் பல்லுக்கு உறுதி.
3. இல்லாள் என்பவள் இல்லுக் கழகு.
4. ஈயார் தேட்டைத் தீயார் கொள்வர்.
5. உண்ணலும் உறங்கலும் அளவுடன் செய்.
6. ஊமை கண்ட கனவினுல் பயன் இல்லை.
7. எட்டாப் பழத்துக்குக் கொட்டாவி விடாதே.
8. ஏரைத் தேடினுல் சீருண்டாகும்.
9. ஐந்தில் அறியான் ஐம்பதிலும் அறியான்.
10. ஒற்றுமை கொள்வதே உயர்ந்த வாழ்வு.
11. ஓதாத நாளெல்லாம் உயர்வற்ற நாளே.
12. ஔவை மொழிகள் ஆக்கம் தரும்.

இந்தப் பழமொழிகளுள் ஒவ்வொன்றிலுமுள்ள முதல் பதத்தின் முதல் எழுத்தை எடுத்து வரிசையா எழுதிப்பார். அப்படி எழுதும் எழுத்துக்களே உயிர் எழுத்துக்கள் எனப்படும். அவைகளை எழுது முறையும் அதுவேயாகும்.

11. முத்துச் சிப்பி

ஓடுகள்	சூஷயம்	முத்துக் குளிப்பவர்
மூச்சு	நீர் மட்டம்	முழுகுவதற்காக
குழாய்	கூடை	நவரத்தினங்கள்
திரட்டி	நிரப்பு	உற்பத்தியாகிறது
அரசாங்கத்தார்	இராது	அணிந்து
சுவாசிக்க	சிப்பி	ஏற்பட்டு
மைல்	சுமார்	முகமூடி

1. நீங்கள் எல்லாரும் முத்தைப் பார்த்திருப்பீர்கள். அதைச் சாதாரணமாகப் பெண்மணிகள், மாலைகளாகச் கோத்துக் கழுத்தில் அணிந்துகொள்ளுகிறார்கள். ஆனால், அது எப்படி உற்பத்தியாகிறது என்பது மட்டும் உங்களுக்குத் தெரிந்திராது.

2. முத்தானது முத்துச் சிப்பிகள் என்ற ஓடுகளுக்குள் காணப்படும். முத்துச் சிப்பிகள் கடலில் சில இடங்களில் அகப்படும். இவைகளைக் கடலிலிருந்து எடுப்பவர்களுக்கு முத்துக் குளிப்பவர்கள் என்பது பெயர்.

3. முத்துக்குளிப்பவர்கள் படகுகளில் ஏறிக் கடலில் சுமார் பத்து மைல் தூரத்துக்கு மேல் போவார்கள். அங்கு முத்துச் சிப்பிகள் கிடைக்கக்கூடிய ஆழமான இடத்தைத் தேடிக் கண்டுபிடிப்பார்கள். பிறகு அவர்கள் தங்கள் கால்களில் பெரிய கற்களைக் கட்டிக்கொண்டு

நீரில் முழுகுவார்கள். அப்போதுதான் சுலபமாக நீரின் தரை மட்டத்துக்குப் போக முடியும்.

4. முன் காலத்தில், நெடுநேரம் மூச்சுப் பிடித்து நீரில் முழுகக் கூடியவர் மட்டுமே இந்தத் தொழிலைச் செய்து வந்தனர். இப்பொழுது சாதாரண மனிதர்களும் நீரில் முழுகுவதற்காக ஏற்பட்டுள்ள முகமூடிகளை அணிந்துகொண்டு குளிக்கலாம். அந்த முகமூடியில் அவர்கள் சுவாசிக்க நீண்ட குழாய்கள் நீர் மட்டம் வரையில் வரும்படி அமைந்திருக்கும். ஆகையால், ஜலத்துக்குள் இருந்தே அவர்கள் நன்றாக மூச்சு விடலாம்.

5. கடல் அடியில் உள்ள சிப்பிகளைத் திரட்டித் தம்முடன் விடப்படும் ஒரு கூடையில் அவர்கள் நிரப்புவார்கள். பின்பு அவைகளை மேலே இழுத்துப் படகுகளில் ஏற்றிக்கொண்டு கரைக்கு வந்து சேருவார்கள்.

6. முத்துச் சிப்பிகள் அரசாங்கத்தாரைச் சேர்ந்தவை. அவைகளை அரசாங்கத்தார் ஏலம் போடுவார். வியாபாரிகள் அவைகளை வாங்கிக்கொண்டு போய்ச் சிப்பிகளை அறுத்து முத்துக்களை எடுப்பார்கள். சில சிப்பிகளில் முத்துக்கள் இரா.

7. சில முத்துக்கள் ஆயிரக்கணக்கான ரூபாய் மதிப்புள்ளவை. முத்துச் சிப்பிகள் நமது நாட்டில் தூத்துக்குடியை அடுத்துள்ள கடலில் அகப்படுகின்றன. முத்து நவரத்தினங்களில் ஒன்று. இதிலிருந்து ஒரு மருந்தும் செய்கிறார்கள். அம்மருந்து க்ஷயம்

முதலிய சில எலும்புருக்கி வியாதிகளைப் போக்கும் என்கிறார்கள்.

வினாக்கள் :

1. முத்துச் சிப்பி எடுப்பவர்களுக்கு என்ன பெயர்?
2. சிப்பி எடுப்பவர்கள் நீரில் இறங்க என்ன செய்வார்கள்?
3. நீரில் இருக்கும்போது எப்படி மூச்சு விடுவார்கள்?
4. முத்துச் சிப்பிகளை அரசாங்கத்தார் என்ன செய்வார்?

பயிற்சி :

1. சில முத்துக்கள் விலை அதிகமுள்ளவை. அவை நமது நாட்டில் கிடைக்கின்றன. (இந்த இரண்டு வாக்கியங்களையும் ஒன்றாகச் சேர்த்து எழுது.)
2. அற்பருடன் சிநேகம் செய்யக்கூடாது. செய்தால்—— ———— (வாக்கியத்தை முடி.)
3. இப்பாடத்தில் வந்துள்ள ஒரே அர்த்தமுள்ள பதங்களை எடுத்து எழுது.

12. கழுதை

அலட்சியமாக	முதுகு	நற்சகுனம்
மந்தமான	எசமானன்	சரிவர
தோழன்	புண்	குணங்கள்
சோந்தக்காரர்	பளுவுடன்	சோற்பமான
இரக்கம்	குட்டிச்சுவர்	அவ்விடம்
	சுமை	

1. கழுதையை நீங்கள் மிகவும் அலட்சியமா எண்ணுகின்றீர்கள், அல்லவா? அதன் உண்மை

யான நல்ல குணங்கள் உங்களுக்குத் தெரியாமையால் அப்படி நினைக்கிறீர்கள். அது மிகவும் மந்தமான மிருகம் என்பது சிலர் எண்ணம். அந்த எண்ணம் தவறு. கழுதையும் மிக்க அறிவுள்ள பிராணிதான்.

2. கழுதையை ஏழைகளின் தோழன் என்று கூறலாம். அதைக் காப்பாற்றுவது மிகவும் சுலபம். அதற்கு வேண்டுவன வெகு சொற்பமான தீனியும் சிறிது தண்ணீருமே. அவைகளைக்கூட அதற்குச் சரிவரச் சொந்தக்காரர்கள் கொடுப்பதில்லை. அவர்கள் கால்களைக் கட்டி, அதை மேய விட்டுவிடுகிறார்கள். கட்டின இடங்கள் சில சமயங்களில் புண்ணாய்விடும். அந்தப் புண்களையும் அவர்கள் கவனிப்பது இல்லை. தவிர, அதை இரக்கமில்லாமலும் அடிக்கின்றார்கள். இந்தச்செய்கைகளெல்லாம் அதை மந்த குணமுடையதாக்கிவிடுகின்றன.

3. எல்லா மிருகங்களையும்விடக் கழுதையே மிக்க பொறுமையுள்ளது. அது எசமானனிடம் அன்புள்ளது. எசமானன் ஓர் இடத்தில் அதை விட்டுச் சென்றால், அவன் திரும்பி வரும் வரையில், அது அவ்விடத்திலேயே இருக்கும். அதைக் கட்ட வேண்டிய அவசியமும் இல்லை. வேறு ஒரு மிருகமும் இவ்வளவு பொறுமையாய் இராது.

4. கழுதை மனிதனால் தாங்க முடியாத சுமைகளையும் தன் முதுகில் சுமந்து செல்லும். அது செங்-

குத்தான மலைகளின் மேலும் ஏறும்; வழுவழுப்பான இடங்களிலும் பளுவுடன் சாயாமல் போகும். ஆகையால், மலைமேல் சாமான்களைக் கொண்டு செல்லவும் கீழே இறங்கிவரவும் கழுதையை உபயோகிக்கின்றனர்.

5. கழுதைக்குக் குட்டிச்சுவரின் பக்கத்தில் நிற்க

அதிகப் பிரியம் என்று கூறுவர். அதனல், 'கழுதை கெட்டால் குட்டிச் சுவர்' என்னும் பழமொழியுமுள்ளது. கழுதையின் உருவைப் பாராமல், அதன் குரலை மட்டும் கேட்பது நல்ல சகுனம் என்று சொல்லுவார்கள். கழுதையின் பாலைச் சிறு குழந்தைகளுக்கு மருந்தாக உபயோகிப்பது உண்டு.

6. இவ்வளவு உபயோகமுள்ள ஒரு மிருகத்தை நாம் சரிவரக் காப்பாற்ற வேண்டுவது அவசியம் அல்லவா?

வினக்கள்:

1. எதனல் கழுதை மந்த குணமுடையதாகிறது?
2. கழுதையின் சிறந்த குணம் என்ன?
3. கழுதை எதற்கு உபயோகப்படுகிறது?

பயிற்சி :

1. கழுதையைப்போல இருக்கும் வேறு ஒரு மிருகம் எது?

2. குதிரையைப்பற்றி ஐந்து வாக்கியங்கள் எழுது.

3. ஏறுதல், இறங்குதல் — இவைகளில் ஒன்று மற்றொன்றுக்கு எதிர்மொழியல்லவா? இவைபோலப்பின் வருபவைகளுக்கு எதிர் மொழிகளை அந்தந்த மொழிக்கு நேராக எழுது :—

பிரியம்	அவமானம்
ஆழம்	தரித்திரன்
இல்லாமல்	நல்லது
மூடன்	சிவப்பு

13. ஒற்றுமையே வலிமை.

குத்த	கலைத்து	களித்து
மனவாட்டம்	அஞ்ச	ஒற்றுமை
	தந்திரசாலி	

1. ஒரு காட்டில் நான்கு எருதுகள் வாழ்ந்து வந்தன. அவை நான்கும் அதிக நேசமாய் இருந்தன. எங்குப் போனாலும் அவை ஒன்றாகவே போய்ப் புல்லை மேயும். அப்படி மேய்ந்து அவை மிகவும் கொழுத்திருந்தன.

2. அவ்வாறு இருக்கையில் ஒரு நாள், சிங்கம் ஒன்று அங்கு வந்தது. சிங்கத்தைக் கண்டும் எருது-கள் நான்கும் சற்றும் அஞ்சவில்லை. எல்லாம் ஒற்று-

மையாய் இருந்து அதை எதிர்த்தன; தம் கொம்பு-களால் சிங்கத்தை முட்டவும் சென்றன. அதைக் கண்ட சிங்கம் பயந்து திரும்பிப் போய்விட்டது.



3. அங்ஙனம் சிங்கம் திரும்பிச் செல்வதை ஒ நரி பார்த்தது. அது உடனே சிங்கத்தைப் பார்த் "நீ ஏன் மனவாட்டத்துடன் திரும்பிப் போகிறாய்? என்று கேட்டது. சிங்கம் நடந்ததைச் சொல்லிற் நரி மிக்க தந்திரமுடையது அல்லவா? ஆகவே, அ சிங்கத்துக்கு ஓர் உபாயம் உரைத்தது: "சிங்க பயப்படாதே! நான் அந்த எருதுகளுக்குள் விரோத உண்டுபண்ணி அவற்றைக் கலைத்துவிடுகிறே அப்போது நீ பயமின்றி அவற்றை ஒவ்வொன்று கொன்று தின்னலாம். ஆனால், நீ தின்று மிகு மாமிசத்தைமட்டும் எனக்குக் கொடு," என்றது. சிங்

மும், "அப்படியே செய். உனக்கில்லாமலா? அவசியம் கொடுக்கிறேன்," என்றது.

4. நரி எருதுகளிடம் சென்றது. அவற்றுள் ஒன்றைத் தனியாக அழைத்துச் சென்று, "எருதே, உனக்கு நல்ல பசுமையான புல்லுள்ள இடத்தை நான் காட்டுகிறேன். மற்ற எருதுகளுக்குத் தெரியாமல் வா," என்று அதன் மனத்தைக் கலைத்து அழைத்துச் சென்றது.

5. ஓர் எருது தனியாய்ச் சென்று மேய்ந்து வந்ததைக் கண்டு, மற்றோர் எருதும் தனியாக வேறோர் இடம் சென்று மேயத் தொடங்கிற்று. இங்ஙனம் செய்யவே, எருதுகளுக்குள் சண்டை உண்டாயிற்று. அது முதல் அவை தனித்தனியாக மேய்ந்து வந்தன. எருதுகள் சண்டையிடுவதைத் தெரிந்து கொண்ட நரி, அச்செய்தியைச் சிங்கத்திடம் சென்று தெரிவித்தது.

6. சிங்கம் நன்றாய்க் கொழுத்திருந்த அந்த

எருதுகளை எப்போது தின்னலாம் என்று காத்திருந்தது. நரி, எருதுகள் சண்டையிட்டுப் பிரிந்திருப்பதைப் பற்றித் தெரிவித்ததும் சிங்கம் எருதுகளிடம் சென்றது; உடனே ஓர் எருதின்மேல் பாய்ந்து அதைக் கொன்று தின்றது. மிகுந்த மாமிசத்தை நரியும் உண்டு களித்தது.

'சேர்ந்து வாழ்வதே சிறந்த வலிமை.'

வினாக்கள் :

1. எருதுகளைச் சிங்கத்தால் முதலில் ஏன் கொல்ல முடியவில்லை?
2. பிறகு நரி சிங்கத்துக்கு என்ன தந்திரம் சொல்லிற்று?
3. நரி எருதுகளை எப்படிக் கலைத்தது?
4. எருதுக்ள் பிரிந்தமையால் என்ன ஆயிற்று?
5. இந்தப் பாட்டின் நீதி என்ன?

பயிற்சி :

1. கொழுத்து, ஒற்றுமை, பிரிந்திருப்பது, மனவாட்டம்—இவைகளுக்கு எதிர்மொழிகளைச் சொல்லு. அவைகளை வாக்கியங்களில் அமைத்து எழுது.

2. நரி ———— உள்ள ஒரு பிராணி.
சிங்கம் ———— உள்ள ஒரு மிருகம்.
எருதுகள் ———— சிங்கம் ஒன்றைக் கொன்றது.

இவ்வாக்கியங்களில் கோடிட்ட இடங்களில் சரியான பதங்களை எழுது.

14. தபால்—II

தாமதம்   பதிவு   இலக்கம்   ரிஜிஸ்தர்

சகுந்தலை: அப்பா, 'ரிஜிஸ்தர் கடிதத்தைப்பற்றி வேறு ஒரு நாள் சொல்லுகிறேன்,' என்று சொன்னீர்களே! இன்று சொல்லுங்கள்.

தகப்பனார்: சகுந்தலை, நாம் எழுதும் கடிதங்களில் ஏதாவது முக்கியமான விஷயம் இருந்தால், அதற்-



குச் சாதாரணக் கடிதத்திற்கு ஒட்டுவதைவிட அதிக மதிப்பு உள்ள பில்லையை ஒட்டினால் அதை ரிஜிஸ்தர் கடிதமாக அனுப்புவார்கள்.

குந் : எதற்காக அப்பா, அப்படி அனுப்புவது?

தக: சாதாரணமான கடிதங்கள் சில சமயங்களில் தாமதமாகப் போகக்கூடும்; சில சமயங்களில் விலாசம் விளங்காமல் இருந்தால், ஓர் ஊருக்குப் பதில் வேறு ஓர் ஊருக்கும் போய்விடலாம். கட்டாயம் போய்ச் சேரவேண்டிய ஒரு கடிதம் இம்மாதிரி தவறிவிடுவது நஷ்டந்தானே! அதற்காக, ரிஜிஸ்தர் செய்து அனுப்புதல் நல்லது.

சகுந்: ரிஜிஸ்தர் செய்தல் என்பது என்ன?

தக: ரிஜிஸ்தர் செய்யப்பட்ட கடிதங்களை இலக்கம் இட்டுத் தபால் ஆபீசு புத்தகத்தில் பதிவு செய்து-கொண்டு, தனியான ஒரு பையில் இட்டு ஜாக்கிர-தையாக அனுப்புவார்கள். அப்போது அந்தக் கடிதம் தவருமல் விலாசதாருக்குப் போய்ச் சேரும்; சீக்கிரமும் போய்ச் சேர்ந்துவிடும்.

சகுந்: அந்தக் கடிதம் போய்ச் சேர்ந்துவிட்டது என்பது நமக்கு எப்படித் தெரியும், அப்பா?

தக: ரிஜிஸ்தர் கடிதத்துடன் தபால் ஆபீசிலிருந்து அச்சிட்ட துண்டுக் கடிதம் ஒட்டப்பட்டு வரும். அதில் கையெழுத்துச் செய்து தபாற்காரரிடம் கொடுத்துவிட்டுத்தான் விலாசதார் அக்கடிதத்தைப் பெற்றுக்கொள்ள வேண்டும். பிறகு, அந்த விலாசதார் கையெழுத்திட்ட துண்டு நமக்கு வந்து சேரும். அதிலிருந்து நாம் அனுப்பி

கடிதத்தை விலாசதார் பெற்றுக்கொண்டிருக்கிறார் என்பதைத் தெரிந்துகொள்ளலாம்.

சுகு: அப்பா, இப்போது ரிஜிஸ்தர் கடிதத்தைப்பற்றி எனக்கு நன்றாகத் தெரிந்தது.

தக: குழந்தாய், சந்தோஷம்! அம்மாள் சாப்பிடக் கூப்பிடுகிறாள். நேரமாய்விட்டது; போ.

வினாக்கள்:

1. எந்தக் கடிதங்களை ரிஜிஸ்தர் செய்து அனுப்புவது நல்லது?

2. ரிஜிஸ்தர் செய்த கடிதத்தைத் தபாலாபீசில் என்ன செய்கிறார்கள்?

3. அதை விலாசதார் எப்படிப் பெற்றுக்கொள்வார்?

பயிற்சி:

1. நீ தபாற்காரர் பணம் கொண்டுவந்து கொடுப்பதைப் பார்த்திருக்கிறாயா? அதற்கு என்ன பெயர்? உபாத்தியாயரைக் கேட்டுத் தெரிந்துகொள்.

2. பணத்தை ஓர் ஊரிலிருந்து மற்றோர் ஊருக்குத் தபாலாபீசு மூலமாய் எப்படி அனுப்புவது என்பதையும் உபாத்தியாயரைக் கேட்டுத் தெரிந்துகொள்.

15. பொன் மொழிகள்—II

அச்சம்	செஞ்சொல்	அக்கம் பக்கம்
நிறைந்தவர்	அண்டினவர்	கைப்பொருள்
செத்தை	சில போது	அர்த்தம்
உறைவது	தெய்வம்	இறைவன்
இம்மைக்கும்	மறுமைக்கும்	நாணம்
செய்யாள்	அகத்து	வாழ்வு
	ஏற்ற	

1. அக்கம் பக்கம் பார்த்துப் பேசு.
2. எங்கும் நிறைந்தவர் கடவுள் என்பவர்.
3. அச்சமும் நாணமும் அறிவிலிக்கு இல்லை.
4. செஞ்சொல்லாகவே என்றும் பேசு.
5. பட்டும் மணியும் பணமுள்ளவர்க்கே.
6. அண்டினவரைக் கைவிடாதே.
7. செத்தையுங்கூடச் சிலபோது உதவும்.
8. தந்தை சொல் மிக்க மந்திரமில்லை.
9. இம்மைக்கும் மறுமைக்கும் ஏற்ற அறம்செய்
10. செய்யாள் உறைவது செந்தாமரையில்.
11. அர்த்தமும் வாழ்வும் அகத்து மட்டுமே.
12. செல்வமும் வறுமையும் ஒரு வழி நில்லா.

14. எவ்வுயிருள்ளும் இறைவர் இருக்கிறார்.
15. வாழ்வும் தாழ்வும் எல்லார்க்கும் உண்டு.
16. கள்ளமும் கபடமும் உள்ளத்திற் களை.
17. பெற்றோரைப் போற்றல் பிள்ளையின் கடமை.
18. அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்.

பயிற்சி:

மேல் வாக்கியங்களிலுள்ள முதற்பதங்களின் இரண்டாவது எழுத்தைத் தனியாக எடுத்து எழுது.

அவைகள் எல்லாம் மெய் எழுத்துக்கள். அவைகளை முன்னமே அறிந்திருக்கிறாய் அல்லவா? இப்போது அவைகளை எழுத வேண்டிய வரிசையைத் தெரிந்துகொள்.

16. சகுன பலன்

சிந்தி	உள்ளுக்கு	துன்பத்துக்குள்
கிடந்த	காயம்	தீர்மானித்தான்
சிரம்	விழித்ததால்	கொலையாளிகள்
வார்த்தை	சேதம்	அற்பனாகிய

1. ஓர் ஊரில் அரசன் ஒருவன் இருந்தான். அவன் ஒரு நாள் விடியற்காலையில் எழுந்து ஜன்னல் வழியாக வீதியில் எட்டிப் பார்த்தான். அப்போது வீதியில் ஓர் ஏழை கீழே சிந்திக்கிடந்த பண்டங்களைப் பொறுக்கிக்கொண்டிருப்பதைக் கண்டான்.

2. உடனே அரசன் தன் தலையை உள்ளுக்கு இழுத்துக்கொண்டான். அவசரமாக இழுத்துக்கொள்ளும்போது ஜன்னல்சட்டம் அவன் தலையில் இடித்தது. அதனல் சிறிது காயம் உண்டாகி ரத்தமும் வந்தது "காலையில் எழுந்து இந்தப் பிச்சைக்காரன் முகத்தில் விழித்ததால் அன்றோ, என் தலையில் காயம் பட்டது. இப்படியே தினந்தோறும் இவன் முகத்தில் விழிப்பவர்களுக் கெல்லாம் என்ன தீமை உண்டாகுமோ!" என்று தனக்குள் எண்ணினன்.

3. பிறகு அரசன் பின்னும் யோசனை செய்தான் "பல துன்பத்துக்கும் ஆளாய் இருக்கும் இவனை உயிருடன் வைக்கக்கூடாது. இவன் தலையை வெட்டிவிட வேண்டும்," என்று தீர்மானித்தான்.

4. உடனே அரசன் தன் கொலையாளிகளை கூப்பிட்டு, "இந்தப் பிச்சைக்காரனைக் கொண்டுபோய் சிரச்சேதம் செய்துவிடுங்கள்," என்று கட்டளை இட்டான். கொலையாளிகள் பிச்சைக்காரனிடம் சென்று விஷயத்தைத் தெரிவித்து, தங்களுடன் வரும்படி அவனை இழுத்தார்கள். அது கேட்ட அந்த ஏழை தான் ராஜாவைக் கண்டு ஒரு வார்த்தை பேசிவிட்டு வந்த பிறகு தன்னை வெட்டும்படி கெஞ்சிக் கேட்டுக் கொண்டான்.

5. கொலையாளிகள் அவன் இஷ்டப்படியே அவனை அரசனிடம் அழைத்துச் சென்றார்கள். ஏழை அரசனைப் பார்த்து, "அரசரே, அற்பனாகிய என் முகத்தில் விழித்ததால் உங்களுக்குச் சிறிது காயம் பட்டது என்று எண்ணி என் தலையை வெட்டச் சொல்லுகிறீர்கள். தூங்கி எழுந்ததும் உங்கள் முகத்தைத் தரிசனம் செய்த எனக்குத் தலையே போய்விடும்படியான துன்பம் நேரிட்டதே! அதற்குத் தீர்ப்பு என்ன என்பதைச் சொல்லிவிட்டுப் பின்பு என் தலையை வெட்டிவிடுங்கள்," என்றான்.

6. இதைக் கேட்ட அரசன் திடுக்கிட்டு, மிகவும் வெட்கமடைந்தான்; ஏழையின் அறிவையும் மெச்சினான். அவனை அழைத்துத் தன் அரண்மனையிலேயே வைத்து எல்லா விதப் படிப்பும் கற்றுக்கொடுத்தான். பின்பு அவனைத் தன் மந்திரியாகவும் அமர்த்திக்கொண்டான்.

வினாக்கள் :

1. அரசனுக்குத் தலையில் எதனால் காயம் பட்டது?
2. அரசன் அதற்கு என்ன காரணம் என்று நினைத்தான்?
3. பிச்சைக்காரன் என்ன கூறித் தப்பினான்?
4. அரசன் அவனைப் பின் என்ன செய்தான்?

பயிற்சி :

இந்தப் பாடத்தில் எத்தனை பத்திகள் இருக்கின்றன? அவைகளுள் ஒவ்வொன்றின் முக்கிய விஷயத்தையும் உதாரணத்தில் காட்டின மாதிரி எழுது :—

உதாரணம் :

முதல் பத்தி-அரசன் காலையில் பிச்சைக்காரனைப்பார்த்தல்.

2-ஆம் பத்தி - தலையில் காயம் பட்டவே அரசன் மற்றவர்களுக்குத் தீங்கு நேரிடுமோ என்று நினைத்தல்.

3-ஆம் பத்தி ——— 5-ஆம் பத்தி ———

4-ஆம் பத்தி ——— 6-ஆம் பத்தி ———

17. காளிதாசன்

கலைகளை	அறிமும்	கவிஞன்
அறிவாளி	சாகுந்தலம்	தேவியை
மதிக்கிறாளோ	மயங்கி	கல்விமான்
வாதத்தில்	ராஜபுத்திரி	வித்துவான்
அவமானம்	சம்ஸ்கிருதம்	மாறு வேஷ
அடிப்பாகம்	காளி	ராஜசபை
மணக்கத்தக்க	கற்றவன்	பூஜித்து

1. நமது தேசத்தில் முன் காலத்தில் மஹிஷபு
என்ற ஓர் ஊர் இருந்தது. அதை ஆண்டுவந்த அரச
னுக்கு ஒரு மகள் இருந்தாள். அவள் கலைகளை எல்லா
நன்றாகக் கற்றவள்; மிகவும் சிறந்த அறிவாளி. அறி
வினால் அவள் அதிக கர்வமும் கொண்டிருந்தாள்.

2. அவள், தான் யாரைச் சிறந்த கல்விமா
என்று மதிக்கிறாளோ, அவரையே மணஞ்செய்ய
போவதாகக் கூறி வந்தாள். அநேக வித்துவான்க
அவளுடன் வாதம் செய்து தோற்றுப்போனார்க
அவளை எப்படியாவது ஒரு மூடனுக்குக் கலியாண
பண்ணி வைத்து அவமானப்படுத்த வேண்டும் என்
எண்ணம் அவர்களுக்கு உண்டாயிற்று.

3. அதற்காக அவர்கள் மாறு வேஷம் பூண்
ஊர் ஊராய்ச் சுற்றி வந்தார்கள். வருகையில் ஓ
அழகான குமரன், ஒரு மரத்தின் நுனிக் கிளையி



உட்கார்ந்து, அதன் அடிப்பாகத்தை வெட்டிக்கொண்டிருந்தான். அதைப் பார்த்த வித்துவான்கள், 'இவனே ராஜகுமாரியை மணக்கத்தக்க சரியான மூடன்,' என்று தீர்மானித்தார்கள்.

4. உடனே, அவர்கள் அவனை ராஜ சபைக்கு அழைத்துக்கொண்டு போனார்கள்; ராஜபுத்திரிக்கு அவனை ஒரு பெரிய வித்துவான் என்று அறிமுகப்படுத்தினார்கள். அவளும் மயங்கி, அவனை மணம் செய்துகொண்டாள். பிறகு அவன் மூடத்தனம் அவளுக்கு வெளியாயிற்று. அவன் பயப்பட்டு நடுங்கினான்.

5. அவள் வெகு புத்திசாலியல்லவா? ஆதலால், அவள் அவனைத் தேற்றினாள். அவனை அந்த ஊரிலுள்ள காளி கோவிலுக்குப் போய், தேவியை வணங்கி வரம் பெற்று வரும்படி சொல்லி அனுப்பினாள். அவனும் அப்படியே சென்று காளியைப் பூஜித்து வரம் பெற்று வந்தான். அதனால், அவனுக்குக் காளிதாசன் என்பது பெயராயிற்று.

6. பிறகு சம்ஸ்கிருதத்தில் அவன் ஒரு கவிஞனாய் விளங்கினான். அந்தப் பாஷையில் அவனுக்குச் சமானமான கவிஞர் ஒருவரும் இல்லை என்றே சொல்லலாம்.

7. காளிதாசன் எழுதின 'சாகுந்தலம்' என்னும் நாடகம் மிகவும் அழகானது. அவன் போஜராஜன் என்னும் அரசனிடம் சம்ஸ்தான கவிஞனாய் இருந்தான்; அநேக பரிசுகளும் பெற்று விளங்கினான்.

வினுக்கள் :

1. ராஜகுமாரியின் கர்வத்தை அடக்க வித்துவான்கள் என்ன தந்திரம் செய்தார்கள்?
2. அவர்கள் யாரைச் சரியான மூடன் என்று நினைத்தார்கள்?
3. காளிதாசன் என்று ஏன் அவனுக்குப் பெயர் வந்தது?
4. காளிதாசன் எழுதிய சிறந்த நாடகம் எது?

பயிற்சி :

1. மாறு வேஷம், அடிப் பாகம், சம்ஸ்தான கவிஞன்-இவைகளைத் தனித்தனி வாக்கியங்களில் அமைத்து எழுது.
2. காளிதாசனை ராஜகுமாரி, அந்த ஊரிலுள்ள காளி கோவிலுக்குப்போய் வணங்கி வரம் பெற்று வரும்படி சொல்லி அனுப்பினுள்—இந்த வாக்கியத்தைப் பிரித்து மூன்று தனி வாக்கியங்களாக எழுது.
3. கோடிட்ட இடங்களில் சரியான பதங்களை அமைத்துப் பூர்த்தி செய் :—

(1) காளிதாசன்————டைய சம்ஸ்தான கவிஞன்.
(2) சாகுந்தலம்————த்தில் ஒரு நாடகம்.
(3) ———— இரண்டாம் முறை குலை தள்ளாது.
(4) கிளியை————அடைப்பது மிகவும்————.

18. எண்

பன்மை	கணிதம்	கணக்கு	வஸ்து
எண்	ஒருமை	குறிக்கிறது	கழித்தல்
		கூட்டல்	

1. பிள்ளைகளே, கணிதத்தில் நீங்கள் ஒன்று, இரண்டு, மூன்று, நான்கு, ஐந்து என்று எண்ணைத் தெரிந்துகொண்டீர்கள் அல்லவா? இந்த எண்களை

ஒன்ருேடு ஒன்று கூட்டினல், கூட்டல் கணக்கு ஆகும். இவற்றுள் ஒன்றிலிருந்து மற்ருென்றைக் கழித்தால், கழித்தல் கணக்கு ஆகும். உங்களுக்கு ஒன்றிலிருந்து எத்தனை வரை எண்ணத் தெரியும்? நூறு வரையில் எழுதிப்பாருங்கள்.

2. இப்போது 'எண்' என்பது, ஒன்றுதொடங்கி விரல்விட்டுக் கணக்கிடும்படியான எண்களைக் குறிக்கிறது என்பது உங்களுக்குத் தெரிகிறதா? அது போலவே 'ஆடு' என்ற சொல், ஓர் ஆடு என்பதைக் காட்டுகிறது. 'ஆடுகள்' என்ற சொல், ஒன்றுக்குமேல் பல ஆடுகள் என்பதைக் காட்டுகின்றது. பசு என்பதற்கு ஒரு பசு என்பது அர்த்தம். பசுக்கள் என்பதற்குப் பல பசுக்கள் என்பது அர்த்தம்.

3. இவ்விதமே பிள்ளை, பெண், புலி, நாய், பழம், செடி என்னும் வார்த்தைகளெல்லாம், அவைகளுள் ஒவ்வொன்று இருக்கிறது என்பதைத் தெரிவிக்கின்றன

4. ஒரு வஸ்துவைக் குறிக்கும் வார்த்தைகளை ஒருமை எண் என்கிருேம்.

5. பல வஸ்துக்களைக் குறிக்கும் வார்த்தைகளைப் பன்மை எண் என்கிருேம்.

6. பிள்ளைகள், பெண்கள், புலிகள், நாய்கள், பழங்கள், செடிகள் என்னும் வார்த்தைகள் ஒன்றுக்கு மேற்பட்ட பல வஸ்துக்கள் இருக்கின்றன என்பதைக் குறிக்கின்றன.

7. எண்ணுவதற்கு 'எண்' என்பது பெயர். ஆகவே, ஒரு வஸ்து இருந்தால், 'ஒருமை' என்று சொல்லுங்கள். பல வஸ்துக்கள் இருந்தால், 'பன்மை' என்று சொல்லுங்கள்.

பயிற்சி:

I. அடியிற்காணும் பெயர்ச்சொற்கள் ஒருமையா பன்மையா என்பதைக் கவனித்துச் சொல்லு:—

மாடு	மேஜைகள்	யானை
பூச்சிகள்	கோலி	கிளி
மான்கள்	காற்றுடி	புறுக்கள்
மனிதர்கள்	இறகுகள்	கல்
தேன் ஈ	கைகள்	வீடு
புஸ்தகங்கள்	பனங்காய்	சிறுவர்
கால்	மாம்பழம்	கண்
வண்டி	பந்துகள்	எலும்பு

II. அடியிற்காணும் சொற்களுக்குப் பன்மை கூறு:—

ஆடை	மயில்
குதிரை	குட்டி
எலி	வால்
பேனா	கண்
கத்தி	நிறம்

III. அடியிற்காண்பவைகளுக்கு ஒருமை கூறு:—

ஆடுகள்	குள்ளர்கள்	மன்னர்கள்
பற்கள்	கள்ளர்கள்	சித்திரகாரர்கள்
சிநேகிதர்கள்	பெண்மணிகள்	பசுக்கள்

19. கரும்பு

கணுக்கள்	கோத்தல்	கொப்பரை
நுனிப்பாகம்	சாறு	உருளைகள்
கருப்பஞ்சோலை	கருப்பங்கழி	நுரை நுரையாக
இடு	இறங்கி	நறுக்கி
கரண்டி	ஆறவை	பாகு

1. உங்களுக்குக் கரும்பு தின்னக் கூலி கொடுக்க வேண்டுமா? வேண்டுவதில்லையே? ஆனால், வேண்டும் அளவு கடித்துத் தின்னுங்கள். கடித்துத் தின்பதோடு 'கரும்பு எப்படிப் பயிராகிறது? அந்தக் கரும்பிலிருந்து என்ன என்ன வஸ்துக்கள் செய்யப்படுகின்றன?' என்பவற்றையும் தெரிந்துகொள்ளுங்கள்.

2. கரும்பு உஷ்ணப் பிரதேசங்களிலேதான் பயிராகும். அந்தச் செடிக்கு விதை இல்லை. கருப்பங்கழியைத் துண்டு துண்டாக வெட்டிப் பூமியில் நடுவார்கள். அத்துண்டுகளிலிருந்து வேர் இறங்கிச் செடி பயிராய்விடும். சாதாரணமாகக் கரும்பு ஆறு அல்லது ஏழு அடி முதல் பன்னிரண்டு அடி உயரம் வரையில் வளரும்.

3. கரும்புக்குக் கணுக்கள் உண்டு. அதன் அடிப்பாகம் மிகவும் இனிப்பாய் இருக்கும்; நுனிப்பாகம் சிறிது உவர்ப்பாய் இருக்கும். கரும்பின் நுனியில் பச்சை நிறமுள்ள நீண்ட இலைகள் உண்டு. கரும்பு பயிராகும் இடத்தைக் கருப்பஞ்சோலை என்பார்கள்.

4. நாட்டுப்புறங்களில் கருப்பங்கழிகளைத் துண்டு துண்டாக நறுக்கி, ஆலைகளில் இடுவார்கள். கரும்பு ஆலையில் இரும்பு உருளைகள் இருக்கும். இடப்படும் துண்டுகளில் இருக்கும் சாற்றை உருளைகள் பிழிந்துவிடும். அந்தச் சாறு, ஆலையின் அடியில் வைத்திருக்கும் ஒரு பாண்டத்தில் விழும். அந்தச் சாற்றைக் கொண்டுபோய்ப் பெரிய கொப்பரைகளில் ஊற்றிக் காய்ச்சுவார்கள்.

5. காய்ச்சும்போது அதில் சிறிது சுண்ணும்பு நீர் ஊற்றினுல், சாற்றில் உள்ள அழுக்கு நுரையாய் மேலே வந்துவிடும். பின்பு அதைக் கரண்டிகளால் நீக்கிவிடுவார்கள். காய்ந்த சாறு பாகு ஆகும். ஆறினுல், அது வெல்லம் ஆய்விடும்.

6. அந்த வெல்லத்தைப் பின்னும் சுத்தம் செய்து வெள்ளைச் சர்க்கரை, கற்கண்டு முதலியவைகள் செய்வார்கள். நமது நாட்டில், இதை அநேக இடங்களில் செய்கிருர்கள். அஸ்கா என்னும் ஊரிலிருந்து வரும் மணல் போன்ற ஒரு சர்க்கரையைத்தான் அஸ்காச் சர்க்கரை என்கிறேம். பனஞ்சாற்றிலிருந்து வெல்லம், கற்கண்டு முதலியவைகள் செய்வது உண்டு. அவை உடம்புக்கு மிகவும் நல்லவை.

வினாக்கள் :

1. கரும்புச் செடியை முதலில் எப்படிப் பயிர் செய்கிறார்கள்?

2. கருப்பஞ்சாறு எப்படி எடுக்கப்படுகிறது ?

3. வெல்லம் எப்படி உண்டாகிறது ?

பயிற்சி :

I. மேற்கூறியவை தவிர, இன்னும் எந்தச் சாறு-களிலிருந்து சர்க்கரை செய்கிறார்கள் என்பதைத் தெரிந்துகொள்.

II. பின் வரும் வாக்கியங்களைச் சேர்த்து ஒரே வாக்கியமாக எழுது:—

1. காய்ச்சப்பட்ட சாறு பாகு ஆகும். அதைத் தொட்டி-களில் ஊற்றுவார்கள். அதை ஆற வைப்பார்கள்.

2. பனஞ்சாற்றிலிருந்து வெல்லம் செய்வார்கள். கற்கண்டு செய்வார்கள். அவை உடம்புக்கு நல்லவை.

III. இந்தப் பாடத்தில் வந்துள்ள பெயர்ச்சொற்களுள் ஆறு கூறு.

20. பேராசை பெருநஷ்டம்

ஆபத்தாய்	சமீபம்	புதையல்
கொன்றுவிடு	முடியும்	மறைவாக
கத்தி	மண் வெட்டி	நாழிகை

1. ஓர் ஊரில் மூன்று பேர் நட்பாய் இருந்தனர். அவர் மூவரும் ஒன்றாகக் கூலி வேலை செய்வர்; கூலிக்கு உழவு வேலையும் செய்வது உண்டு.

2. ஒரு நாள் அந்த மூன்று சினேகிதர்களும் சேர்ந்து அயலூருக்குப் போனார்கள். அங்கு அவர்களுக்கு உழவு வேலையும் கிடைத்தது. உழுதுகொண்டிருக்கையில் கலப்பை பூமியில் தடைப்பட்டது. உடனே அவர்கள் மண் வெட்டியால் மண்ணைவெட்டி ஒரு பெரிய புதையலைக் கண்டார்கள். அதை எடுத்துப் பார்க்க, அது சவரன் நிறைந்த ஒரு குடமாய் இருந்தது.

3. மூன்று பேரும் சவரன்களைப் பங்கிட்டுக்கொள்ளத் தீர்மானித்தனர். ஆனால், அப்போது பகல் வேளை. யாராவது அங்கு வந்துபார்த்துவிட்டால் ஆபத்தாய் முடியுமல்லவா? அதுபற்றி அவர்கள் குடத்தை மறைவாக ஓரிடத்தில் வைத்துவிட்டு, இரவு வரையில் ஒரு மரத்தடியில் உட்கார்ந்திருந்தார்கள்.

4. அப்போது அவர்களுள் ஒருவனைச் சமீபத்திலுள்ள ஊருக்குப்போய்ச் சாப்பாடு வாங்கி வரச்

சொல்லி அனுப்பினார்கள். அவனும் அவ்விதமே சென்றான். போகும் வழியில் அவனுக்கு ஓர் எண்ணம் உண்டாயிற்று. அதாவது, 'நாம் வாங்கி வரும் ஆகாரத்தில் சிறிது விஷம் கலந்து இவர்களுக்குக் கொடுத்துவிட்டால், இவர்கள் இறந்துவிடுவார்கள். அப்புறம் நாமே பொருள் முழுவதையும் எடுத்துச் செல்லலாம்,' என்பதே.

5. இவ்விதம் அவன் எண்ணுகையில், காட்டில் இருந்த இருவரும், ஆகாரம் கொண்டு வரச் சென்றவனைத் திரும்பி வந்ததும் கொன்றுவிட்டு, பணத்தைத் தாம் இருவருமே பங்கிட்டுக்கொள்ள எண்ணினர்.

6. சாப்பாடு வாங்கி வரப் போனவன், தான் நினைத்தபடியே உணவில் விஷம் கலந்து கொண்டு

வந்தான். அவன் திரும்பி வந்ததும், காட்டில் இருந்த இருவரும் அவனைக் கத்தியால் வெட்டிக்

கொன்றனர். அவன் இறந்துவிட்டான் என்பது அவர்களுக்குத் தெரிந்துவிட்டது.

7. உடனே இருவரும் அவன் கொண்டு வந்த உணவை எடுத்து வைத்துக்கொண்டு, சந்தோஷத்துடன் சாப்பிட்டார்கள். சில நாழிகைக்குள் உணவிலுள்ள விஷம் அவர்கள் தலைக்கேறியது. இருவரும் மூர்ச்சையாய்க் கீழே விழுந்து இறந்தனர்.

8. பேராசை கொண்டதால் மூவரும் கிடைத்த பணத்தை அனுபவிக்கவில்லை; உயிரையும் இழந்தனர். இதனால், 'பேராசை பெருநஷ்டம்,' என்பது உங்களுக்கு விளங்குகிறதல்லவா?

வினாக்கள் :

1. சாப்பாடு கொண்டுவரச் சென்றவன் என்ன நினைத்தான்?

2. மற்ற இருவரும் ஏன் இறந்தனர்?

பயிற்சி :

கோடிட்ட இடங்களில் சரியான பதங்களை எழுது :—

மூன்று———ஓர் ஊருக்கு————அவர்கள்———உழும் போது ஒரு————அகப்பட்டது. அதைப்————கொள்ள————வரையில் காத்தனர். ஒருவனை————வாங்கிவர————. அவன்————கலந்த உணவைக் கொண்டு————வந்ததும் அவனை————. பிறகு இருவரும் விஷம்————உணவை———— இறந்தனர்————பெருநஷ்டம்.

21. பூச்சிகள்

அவமதிக்க	வண்ணத்திப் பூச்சி	துன்புறுத்து
நாட்டுப்புறம்	தட்டாரப்பூச்சி	தும்பி
பச்சைப்பசேல்	பட்டுப் பூச்சி	இழைக்கலாமா
துப்பாக்கி	உருண்டை வில்	குறும்பு

1. குழந்தைகளே, பூச்சிகள் மிகவும் அற்பமானவை என்று நீங்கள் எண்ணி அவமதிக்கக்கூடும். அவை நமக்கு என்ன நன்மைகள் செய்கின்றன என்று நினைக்கலாம். நீங்கள் அவைகளின் செய்கைகளைப் பற்றி முழுதும் அறியாமையால், அவ்வாறு நினைக்கிறீர்கள்.

2. நாட்டுப்புறங்களில் நீங்கள் போய்ப் பார்த்தால், எங்கும் பச்சைப்பசேல் என்று மரங்கள் நிறைந்திருக்கும். தடாகங்களில் நீர் நிறைந்திருக்கும். வயல்களில் பயிர் வளர்ந்திருக்கும். புஷ்பங்கள் பூத்திருக்கும். இவைகளுடன் தேனீக்கள், பட்டுப் பூச்சி, தட்டாரப் பூச்சி, வண்ணத்திப் பூச்சி முதலியவைகளும் காணப்படும். அந்தப் பூச்சிகள் பார்வைக்கு எவ்வளவு அழகாய் இருக்கின்றன!

3. சில குறும்புப் பிள்ளைகள் உருண்டை வில் சிறு துப்பாக்கி முதலியவைகளை எடுத்துச் சென்று அச்சிறு ஜந்துக்களைத் துன்புறுத்துகிறார்கள். இஃது மிகவும் கொடுமையான செய்கையல்லவா? தும்பியின் வாலிலும், பொன் வண்டின் கழுத்திலும் கயிற்றைக் கட்டிப் பறக்கவிடலாமா? அவைகளைக் குச்சியா

குத்தலாமா? அவைகளும் உங்களைப்போல உயிருள்ள ஜந்துக்களாகையால், அவைகளுக்கு நோகும் அல்லவா? உங்கள் உடம்பில் ஊசியால் குத்தினால் நோகிறதா, இல்லையா என்று பாருங்கள்.



4. தவளை, குளம் குட்டைகளிலுள்ள கெட்ட பூச்சி புழுக்களைப் பிடித்துத் தின்கிறது. அதனால், அது நீரைச் சுத்தம் செய்கிறது. அப்படிப்பட்ட பிராணிக்குத் துன்பம் இழைக்கலாமா? அது பயிருக்குக் கெடுதி செய்யும் பூச்சிகளையும் பிடித்துத் தின்றுவிடும். அதனால், குடியானவர்களுக்கு எவ்வளவு நன்மை என்பதைக் கவனியுங்கள்.

5. தேன் வண்டுகள், பூக்களிலுள்ள தேனைக் கொண்டுபோய் எவ்வளவு அழகாகக் கூட்டில் சேர்க்-

கின்றன! நமக்குத் தேன் உண்ண இனிமையாய் இல்லையா? நாம் இவ்வளவு அருமையான செயல்களைச் செய்யும் ஜந்துக்களுக்குத் துன்பம் செய்யக்கூடாது.

6. எறும்பு முதலியவைகளும் எவ்வளவு சுறு-சுறுப்பாய் வேலை செய்கின்றன! அவைகளைப் பார்த்து நாம் எத்தனை நீதிகளை அறியலாம்! பட்டுப் பூச்சி எவ்வளவு அழகான பட்டு நூல் கொடுக்கிறது! ஆகையால், இனி ஒரு பூச்சிக்கும் துன்பம் செய்யாதீர்-கள். அவைகளைத் துடிக்கத் துடிக்கப் பிடித்துப் பறக்கவிடாதீர்கள்.

வினாக்கள்:

1. தவளைகள் நமக்கு என்ன நன்மை செய்கின்றன?
2. தேனீக்கள் என்ன செய்கின்றன?

பயிற்சி:

1. 'அன்பு' என்பதைப்பற்றி ஐந்து வாக்கியங்கள் எழுது.
2. கழுத்தில் புண் இருக்கும் எருதை வண்டியில் கட்டியிருந்தால், நீ வண்டிக்காரனுக்கு என்ன சொல்லுவாய்?
3. பச்சைப்பசேலென்று—இதுபோல வேறு மூன்று அடுக்கு மொழிகளை எழுது.

22. இரவிந்திரநாத தாகூர்

வங்க பாஷை	கல்விச்சாலை	முழுப்பெயர்
மொழி பெயர்த்தார்	அதிசயப்பட்டார்	ஜாதி மதம்
தொகை	பேதம்	லக்ஷம்
தேசபக்தர்	பரிசு	

1. தாகூர் என்பவர் நமது நாட்டில் இருந்த ஒரு பெரிய கவிஞர். அவர் வங்காளத்தில் பிறந்தவர்

அவர் ஓர் உயர்ந்த குடும்பத்தைச் சேர்ந்தவர். இளமையிலேயே ஆங்கிலம், வங்கம் என்ற இரண்டு பாஷைகளையும் அவர் நன்றாகக் கற்றார்.

2. முதல் முதல், அவர் வங்க பாஷையில் பல பாட்டுக்கள் பாடினார்; பிறகு அவைகளை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்தார். அந்தப் பாடல்கள் படிப்பதற்கு மிகவும் அழகாய் இருக்கும்; காதுக்குக் கேட்கவும் இன்பந்தரும்.



3. அவர் செய்த நூலின் பெயர் 'கீதாஞ்சலி'. முதலில் அவர் அதை வங்க பாஷையில் எழுதினார். அந்த நூலின் அழகைக் கண்டு உலகத்திலுள்ள எல்லா மக்களும் அதிசயப்பட்டார்கள்.

4. அந்தப் புஸ்தகத்தை எழுதியதற்காகத் தாகூருக்கு 'நோபெல் பரிசு' என்ற ஒரு பரிசு ஐரோப்பியரால் கொடுக்கப்பட்டது. அந்தப் பரிசின் தொகை ஒன்பதினாயிரம் பவுன்; அதாவது, லக்ஷம் ரூபாய்க்கு மேல் ஆகும்.

5. இப்பொழுது கல்கத்தாவுக்கு அப்பால் நூறு மைல் தூரத்தில் போல்பூர் என்னும் ஒரு கிராமம் இருக்-

கிறது. சிறுவர்கள் கற்பதற்காகத் தாகூர் அங்கு ஒரு கல்விச்சாலை ஏற்படுத்தியிருக்கிறார். அதற்குச் சாந்தி நிகேதனம் என்பது பெயர். அந்தப் பள்ளிக்கூடத்தில் வகுப்புகள், மரங்களின் அடியிலும், வெட்ட வெளி-களிலுமே நடக்கும். மாணாக்கர்களுள் ஜாதி மத பேதம் இல்லை. மாணாக்கர்களும் உபாத்தியாயர்களும் அங்கே ஒன்றாகக் குடியிருக்கின்றார்கள்.

6. இந்தியாவிலிருந்த பெரியாருள் தாகூர் ஒருவராவர். இரவீந்திரநாத தாகூர் என்பது அவர் முழுப் பெயர். அவர் ஒரு பெரிய தேச பக்தர். அவர் பூதவுடல் மறைந்தது; ஆயினும் புகழுடல் மறையாது.

வினாக்கள் :

1. தாகூர் எழுதிய சிறந்த நூலின் பெயர் என்ன?
2. அந்த நூலை முதலில் எந்தப் பாஷையில் அவர் எழுதினார்.
3. அதற்காக அவர் என்ன பரிசு பெற்றார்?
4. அவர் ஏற்படுத்தியுள்ள பாட்சாலையின் பெயர் என்ன?
5. அந்தப் பாடசாலையில் எங்கு வகுப்புக்கள் நடக்கின்றன?

பயிற்சி :

1. தாகூரைப்போல உனக்குத் தெரிந்த வேறு தேச பக்தர் ஒருவரைப் பற்றி ஐந்து வாக்கியங்கள் எழுது.
2. உயர்ந்த குடும்பம், இன்பம் தரும், உலகத்துப் பெரியார் இந்தத் தொடர்களை வாக்கியங்களில் அமைத்து எழுது.

3. தாகூர் கீதாஞ்சலி என்ற நூலை எழுதினர். அவர் அதை வங்க பாஷையில் எழுதினர்; பின்பு அதை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்தார்—இந்த மூன்று வாக்கியங்களையும் சேர்த்து ஒரே வாக்கியமாக எழுது.

4. சம்ஸ்கிருதத்தில் காளிதாசர் ஒரு பெரிய கவிஞர். ஆங்கிலத்தில் தாகூர் ஒரு பெரிய கவிஞர்; தமிழில் கம்பர் ஒரு பெரிய கவிஞர்.—இந்த வாக்கியங்களை ஒன்ருகச் சேர்த்து எழுது.

23. வினைச்சொல்

வெளியிலிருந்து	படிக்கிறேன்	தொழில்
செய்கிருய்	காரியம்	பதங்கள்

1. நீ பாடம் படித்துக்கொண்டிருக்கும் போது உன் தகப்பனர் வெளியிலிருந்து, 'நீ என்ன செய்கிருய்?' என்று கேட்டால், என்ன பதில் கூறுவாய்? 'நான் படிக்கிறேன்,' என்று பதில் சொல்லுவாய் அல்லவா? அப்போது நீ செய்துகொண்டிருக்கும் காரியம் என்ன? படித்தலாகிய காரியந்தானே?

2. அதுபோல, ஒவ்வொரு நாளும் நீ காலையில் படுக்கையை விட்டு எழுந்ததிலிருந்து இரவு படுக்கைக்குப் போகும் வரையில் எத்தனை காரியங்களைச் செய்கிருய் என்பதை யோசித்துப் பார். அப்படி நீ செய்யும் ஒவ்வொரு காரியமும், தொழில் என்று சொல்லப்படும். இதை வினை என்றும் கூறலாம்.

3. ஆகவே, காரியம், தொழில், செயல், வினை என்னும் பதங்களெல்லாம் ஒரே அர்த்தம் உடைய-

சொற்களே. காரியங்களைக் குறிக்கும் சொற்களை, வினைச்சொல் என்று கூறுகிறோம். ஆகவே, நீ செய்யும் ஒவ்வொரு காரியத்தையும் குறிக்கும் சொல்லும் வினைச்சொல்லே ஆகும். உண்டான், இருந்தான், படுத்தான், கண்டான், நடந்தான், வந்தான் என்பவை எல்லாம் வினைச்சொற்களே.

பயிற்சி:

I அடியிற்காணும் சொல்தொடர்களிலுள்ள வினைச்சொற்களை எடுத்து எழுது:—

1 இராமனைக் கண்டான்.	5. உண்மை பேசு.
2. படித்த பாடம்	6. அன்பு செய்.
3. உண்ணும் வேளை	7. குடத்தைச் செய்தான்.
3. பாடம் படி.	8. மடத்தைக் கட்டினான்.

II பின் வரும் வினைச்சொற்களை வாக்கியங்களில் அமைத்து எழுது:—

நடந்த,	ஓடினான்,	சூடினான்,	பாடினான்,
சென்ற,	ஓடிந்த,	உடையும்,	செல்லும்.

III அடியிற்காணும் வாக்கியங்களில், பெயர்ச்சொல், வினைச்சொல் இரண்டையும் பிரித்து எடுத்து எழுது:—

1. வாழைக்காய் கறி சமைக்க உதவும்.
2. கிளியின் மூக்குச் சிவப்பாய் இருக்கும்.
3, முத்துக்கள் அதிருஷ்டத்துக்குத் தக்கபடி இருக்கும்.
4. பிள்ளைகள் பள்ளிக்கூடத்தில் பந்து ஆடுகிறார்கள்.
5. ஆராயாது நீ மனிதர்களுடன் சிநேகம் செய்யாதே.
6. பெற்றோர் சொல்லைக் கேட்பது பிள்ளைகள் கடமை ஆகு[ம்]
7. உழவனுக்கு எருதும் கலப்பையும் வேண்டும்.
8. நீ ஆடை அணிகளை அழுக்கடையச் செய்யாதே.

24. சுக வாழ்வு

உபயோகப்படும்	அணுக மாட்டா	குறைவற்ற
வழங்குகிறது	வெட்ட வெளி	சுகாதார விதி
தெருக்கள்	நோயற்ற	வெண்மையான

1. நீ உலகத்தில் முதலில் சம்பாதிக்கவேண்டும் பொருள் என்ன தெரியுமா? பணமோ செல்வமோ அன்று. அதைப் பின்னால் சம்பாதித்துக்கொள்ளலாம். நீ முதலில் சம்பாதித்துக்கொள்ள வேண்டுவது நோயற்ற உடம்பேயாகும்.

2. உடம்பு யாதொரு நோயும் இல்லாமல் சுகமாய் இருக்க வேண்டும். அப்போதுதான் மற்றப் பொருள்கள் எல்லாம் உனக்கு உபயோகப்படும். 'நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்,' என்பதும் இது பற்றியே வழங்குகிறது.

3. இம்மாதிரி நோயில்லாமல் வாழ்வதற்காகச் சில சுகாதார விதிகளை இளமையிலிருந்தே நீ கவனிக்க வேண்டும். நீ தினந்தோறும் விடியற்காலையில் எழுந்திருக்க வேண்டும். எழுந்தவுடன் கடவுளை வணங்க வேண்டும்.

4. உடனே நன்றாகப் பல் துலக்க வேண்டும். வாயின் மூலமாகத்தான் பல நோய்களும் உடம்புக்கு

ஏற்படுவதாக வைத்தியர்கள் சொல்லுகின்றூர்கள். பற்கள் வெண்மையாகவும் துர்நாற்றமற்றும் இருக்க வேண்டுவது மிகவும் அவசியம்.

5. உனது உடம்பையும் ஆடையையும் நன்ருகச் சுத்தம் செய்ய வேண்டும். 'கூழானுலும் குளித்துக் குடி; கந்தையானுலும் கசக்கிக் கட்டு,' என்பது சிறந்த பழமொழி. பிறகு சுறுசுறுப்பாகப் பாடங்களைப் படித்துவிட்டுப் பள்ளிக்கூடம் போக வேண்டும்.

6. பள்ளிக்கூடத்தில் நீ உன் உபாத்தியாயருக்குக் கீழ்ப்படிந்து நடக்க வேண்டும். வகுப்புப் பிள்ளைகளுள் ஒருவருடனும் நீ சண்டையிடலாகாது. பள்ளிக்கூடம் போகும்போது வீதியில் ஒரு புறமாகச் செல்ல வேண்டும். நடுத்தெருக்களில் அஜாக்கிரதையாக நடந்து போகக்கூடாது.

7. மாலைப்பொழுதில் நன்ருகத் தேகப்பயிற்சி செய்ய வேண்டும். உடலுக்கு நன்ருகப் பயிற்சி கொடுத்தால், பசி நன்ருக உண்டாகும். அப்படி நன்ருகப் பசித்த பிறகே நீ தினந்தோறும் உண்ண வேண்டும். தேகப் பயிற்சியை வெட்ட வெளிகளில் நல்ல காற்று உள்ள இடங்களில் செய்ய வேண்டும்.

8. இரவில் உண்ட பிறகு, மறு நாள் பாடங்களைப் படித்துவிட்டுச் சீக்கிரமாகவே நித்திரை செய்தல் நல்லது. நீ படுக்கும் அறையிலுள்ள ஜன்னல்களை நன்ருகத் திறந்து வைத்துவிட்டுப் படுத்தல் நல்லது. அப்போதுதான் காற்ரேட்டமும் இருக்கும்; சுத்த

காற்றையும் நீ சுவாசிப்பாய். அப்படியல்லாமல்,



அறையை மூடிவைத்துவிட்டு உறங்கினல்,உடம்புக்குக் கெடுதி ஏற்படும்.

9. இம்மாதிரி நீ செய்து வந்தால், உன்னே நோய்கள் அணுகமாட்டா. நீ சுகமாகவும் வாழலாம்.

பயிற்சி:

I. இவை போல இன்னும் வேறு சுகாதார விதிகள் உனக்குத் தெரிந்தவற்றில் ஐந்து எழுது.

II. இந்தப் பாடத்திலிருந்து பத்து வினைச்சொற்களைப் பொறுக்கி எழுது.

III. சுறுசுறுப்பு, வெட்டவெளி–இவைபோன்ற உனக்குத் தெரிந்த வேறு அடுக்கு மொழிகள் ஐந்து எழுது.

IV. அடியிற்காணும் வார்த்தைகளைக் கோடுள்ள இடங்களில் பொருத்தமாக அமைத்து எழுது:—

அன்பாக	முற்றினல்	பூனையிடம்	தந்திரமுள்ள
சிப்பிகளில்	கடிதங்கள்	பொறுமையால்	பலவிடங்களில்
	சாதுரியத்தால்	பொறுமை	

1. வாழைக்காய் ——— பழமாகும்.
2. கிளியை வளர்த்துப் ——— யிடம் கொடுத்ததுபோல
3. வித்துவான்கள் ———ஒரு மூடனை அரசகுமாரியிடம் அழைத்துச் சென்றார்கள்.
4. நாய் எஜமானனிடம் ——— இருக்கும்.
5. கழுதை மந்தமாயிருந்தாலும் ——— உடையது.
6. பிச்சைக்காரன் புத்தி ——— மரண தண்டனையிலிருந்து தப்பினான்.
7. நரி ஒரு ——— உள்ள மிருகம்.
8. சில ——— முத்துக்கள் இரா.
9. நமது நாட்டில் கரும்பு ——— பயிராகிறது.
10. தபாற்காரர் ——— கொடுப்பார்.

25. குரங்காட்டி

குரங்காட்டி	புது	தேம்பி	முந்தின
பொழுது	இலங்கை	கழி	நடனமாடும்
விடிவது	பாம்பாட்டி	கொம்பு	சுளிக்கும்
விளக்கு	உடுத்து	விநோதம்	பழக்குகிறார்கள்
கோல்	மகிழ்	சர்க்கஸ்	எழும்பி
பாவனை	கொடிய	தீமை	பெருமாள் மாடு

1. குரங்கு மிகவும் அறிவுள்ள ஜந்து. நாம் செய்யும் ஒவ்வொரு செயலையும் பார்த்து, அதுவும் அப்படியே செய்யும். அதைச் சில பிச்சைக்காரர்கள் பிடித்து வைத்துப் பழக்குகின்றார்கள். அப்படிப்

பழக்கினல், அவர்கள் செய்யச் சொல்லும் காரியங்களை எல்லாம் அது செய்யும். அவர்கள் அதைக்கொண்டு ஜனங்களுக்கு வேடிக்கை காட்டிப் பிழைப்பார்கள்.

2. சர்க்கஸ் முதலியவற்றில் குரங்குகள் சைக்கிள் விடுவதை நீங்கள் பார்த்திருக்கின்றீர்களா? அதைப் போலவே குரங்காட்டியும் அதைப் பிடித்துப் பழக்கி-விடுகிருன். படத்தில் உள்ளவன் ஒரு குரங்காட்டி. இவனை நீங்கள் அனேக முறை பார்த்திருக்கலாம்.

3. இந்தக் குரங்காட்டி, தன் குரங்குகளுக்கு ஆடை உடுத்துவான்; குரங்கின் கையில் ஒரு கொட்-டாங்கச்சியைக் கொடுப்பான். குரங்கு அதைத் தன் தலையில் தூக்கி வைத்துக்கொள்ளும். அதைக் 'குளத்-துக்குப் போய்த் தண்ணீர் கொண்டு வா,' என்பான். அது போக இஷ்டப்படாததுபோல முகத்தைச் சுளிக்-

கும். 'புருஷன் அடித்தானு?' என்-பான். அப்போது அது தேம்பித் தேம்பி அழுவது போலப் பாவனை செய்யும். 'அழா-தே! நீ தாய் வீட்-டுக்குப் போகிருயா?' என்பான். உடனே அது வேக-மாய் ஓடும். குரங்கைச் 'சலாம் செய்' என்ருல், அது உடனே செய்யும்.

4. இம்மாதிரி வேடிக்கையாகச் சிறுவர்களை மகிழச்செய்ய, இவன் விளையாட்டுக் காட்டுவான்; பிறகு தன் கையில் ஒரு கொம்பைப் பிடித்துக்கொண்டு ஆட்டுவான். உடனே அதுவும் ஆடத்தொடங்கி நடனமாடும். தன் கையிலுள்ள கழியைக் குறுக்காகப் பிடித்து, 'இலங்கா பட்டணம் தாவு,' என்பான். அதுவும் கழியின்மேல் எழும்பித் தாண்டும்.

5. இவ்விதம் பல வேடிக்கைகளை இவன் சிறுவர் சிறுமியர்களுக்குக் காட்டி, அரிசி துணி முதலியவைகளை வாங்கிக்கொண்டு போவான். நமது நாட்டில் குரங்காட்டிகளும் ஒரு வகைப் பிச்சைக்காரர்களே. இவர்களைப்போலவே பாம்பாட்டி, பெருமாள் மாட்டுக்காரன், குடுகுடுப்பைக்காரன் முதலிய விநோதப் பிச்சைக்காரர்களும் உண்டு.

6. 'கோல் ஆடினால் குரங்கு ஆடும்,' என்பது பழமொழி.

பயிற்சி :

I. கோடிட்ட இடங்களில் சரியான பதங்களை எழுதிப் பூர்த்தி செய் :—

1. குரங்காட்டி கையில்———எடுத்தால் குரங்கு ஆடும்.
2. குரங்காட்டியின் வார்த்தைகள்———இருக்கும்.
3. சிறுவர்கள் குரங்காட்டி செய்வதைக் கண்டு———.
4. குரங்காட்டியைப் போல வேறு——உண்டு.

II குரங்காட்டி தன் கையில் ஒரு கழியைப் பிடித்துக் குரங்கை தாண்டச் சொல்வான்.

இதை இரண்டு வாக்கியங்களாகப் பிரித்து எழுது.

III. குரங்கு அறிவுள்ள ஜந்து. அது மனிதர் செய்வதைப் போலவே செய்யும்.

இதை ஒரே வாக்கியமாகச் சேர்த்து எழுது.

IV. நடனமாடும் = நடனம் + ஆடும். இதைப் போலப் பின் உள்ளவைகளைப் பிரித்து எழுது :—

பாம்பாட்டி, குரங்காட்டி, படத்திலுள்ளவன், அறிவுள்ள.

26. தீபாவளி

நாளைக்கு	கங்கா ஸ்நானம்	கிருஷ்ணன்
இந்துக்கள்	வரிசை	ஒழிந்து
இந்திய	வடநாட்டில்	ஐப்பசி
திவாலி	சீனவெடி	அமாவாசை
தீபங்களின்	நரகாசுரன்	கொண்டாடு
அசுரன்	உற்சாகம்	சீன தேசம்
	விடுமுறை	

கோபாலன்: அப்பா, இன்றைக்குத் தீபாவளிப் பண்டிகை ஆயிற்றே! 'தீபாவளி' என்பது என்ன அப்பா?

தகப்பனார்: இது இந்துக்களுக்கு ஒரு முக்கியமான பண்டிகை. இதை இந்தியா முழுதும் கொண்டாடுகிறார்கள். இதை வடநாட்டில் 'திவாலி' என்று கூறுவார்கள். இந்தப் பதங்களுக்குத் 'தீபங்களின் வரிசை' என்பது அர்த்தம்.

கோபாலன்: எதற்காகத் தீபங்களை வரிசையாக ஏற்ற வேண்டும்?

தகப்பனர்: முன் காலத்தில் நரகாசுரன் என்ற ஒ
கொடிய அசுரன் இருந்தான். அவன் உலக
தில் எல்லா மக்களுக்கும் தீமை செய்து வந்தா
அவனைக் கிருஷ்ணர் கொன்ருர். அதனல், மக்
ளுக்கெல்லாம் துன்பம் ஒழிந்தது; சுகம் உண்ட
யிற்று.

கோபா: அதற்காக இப்போது என்ன?

தகப்: அவனைக் கொன்ற நாள் ஐப்பசி மாதத்தி
அமாவாசைக்கு முந்தின நாள். அந்தத் தின
தை இப்போதும் நாம் கொண்டாடுகிருேம்.

கோபா: அதற்கு விளக்கு ஏற்றி வைக்க வேண்டுமா?

தகப்: ஆம். அன்று பொழுது விடிவதற்குச் சில நாழ
கைக்கு முன்னமே எழுந்து, வரிசையாக விளக்
ஏற்றி வைப்போம். பிறகு எண்ணெய் தேய்த்
ஸ்நானம் செய்வோம். அதைக் 'கங்கா ஸ்நா
னம்' என்று கூறுவது வழக்கம். அப்புறம் பு
ஆடை அணிந்துகொள்வோம்.

கோபா: நாம் எதற்காகப் பட்டாசு சுடுகிருேம்?

தகப்: இது சிறுவர் சிறுமிகளுக்கு உற்சாகம் கொடுக்
கக்கூடிய ஒரு வேடிக்கை. நாம் சந்தோஷமா
இருக்கும் நாளில், பட்டாசு முதலியவைக
சுட்டு மகிழ்கிருேம்.

கோபா: பட்டாசுக்கு ஏன் சீன வெடி என்னும் பெய
வந்தது?

6

தகப்: அது சீன தேசத்திலிருந்து செய்து வருகிறது. அதனால், சீன வெடி என்பது அதன் பெயர்.

கோபா: இப்போது எனக்குத் தீபாவளியைப்பற்றி நன்றாகத் தெரிந்துவிட்டது, அப்பா !

பயிற்சி :

I. தீபாவளியைப்போல உனக்குத் தெரிந்த ஒரு பண்டிகையைக் குறித்து ஐந்து வாக்கியங்கள் எழுது.

II. முந்தின நாள், ஏற்றி வைத்தல், உற்சாகம், தெரிந்துவிட்டது, துன்பம், பொழுது விடிதல்—இவைகளுக்கு எதிரான பதங்களை எழுது.

III. பின் கோடிட்ட இடங்களில் சரியான வார்த்தைகளை அமைத்து எழுது:—

1. நாம் புது ஆடை அணிந்து————.(கொள்ளுகிறேன், கொள்ளுகிறோம்.)

2. நான் தெரிந்து ——— (கொண்டேன், கொண்டோம்).
3. அவன் பட்டாசு ——— (வெடித்தேன், வெடித்தான்).
4. தீபாவளியன்று ஜனங்கள் சந்தோஷமாய் ——— (இருப்பார்கள், இருக்கிறீர்கள்).

27. முற்றுப்புள்ளி

முற்றுதல்	புள்ளி	வியந்தான்
நீர் பாய்ச்சி	விளங்கும்	அச்சிடு
மடக்கிற்று	முடிதல்	தொடர்ச்சி
ஒன்றன் பின்	பெட்டை	வாசி
நிறுத்துகிறது	திகைத்து	

கீழ் வகுப்புப் பாடங்களில், ஒவ்வொரு வாக்கியமும் தனித்தனி பெரிய எழுத்துக்களில் அச்சிடப்பட்டிருந்தது. நீங்கள் சுலபமாகப் படித்துவிட்டீர்கள்.

இப்போதுள்ள பாடங்களில் பல வாக்கியங்கள் ஒன்றன் பின் ஒன்ருய்த் தொடர்ச்சியாய் இருக்கின்றன அல்லவா? அப்படி இருந்தால், ஒரு பாடத்தைப் படிக்கும்போது நிறுத்தவேண்டிய இடம் எது என்பது உங்களுக்கு எப்படித் தெரியும்?

அதைத் தெரிந்துகொள்வதற்காக, ஒவ்வொரு வாக்கியத்தின் கடைசியிலும் ஒரு புள்ளி அச்சிட்டிருக்கும். புள்ளி இருக்கும் இடத்தில் நீங்கள் சற்று நிறுத்தவேண்டும். பிறகு மறு வாக்கியத்தை வாசிக்கத் தொடங்க வேண்டும். அப்பொழுதுதான் நீங்க

வாசிப்பதனுடைய அர்த்தம், உங்களுக்குச் சுலபமாக விளங்கும்.

4. இம்மாதிரி இடப்பட்டிருக்கும் புள்ளி, வாக்கியம் முடிந்துவிட்டது என்பதைக் காட்டுகின்றது. இதற்கு முற்றுப்புள்ளி என்பது பெயர். முற்றுதல் என்றாலும் முடிதல் என்றாலும் அர்த்தம் ஒன்றேதான்.

5. நீங்கள் எழுதும் போதும் இது போல ஒவ்வொரு வாக்கியத்தின் கடைசியிலும் முற்றுப்புள்ளி இட்டு எழுத வேண்டும்.

பயிற்சி :

அடியிற்காணும் கதையைப் படி. வாக்கியம் முடியும் இடங்களில் முற்றுப் புள்ளி இடு.

கதை :

ஒரு பிரபு சேவலும் பெட்டையுமான இரண்டு கோழிகளை வளர்த்து வந்தார் அவை ஒன்றை விட்டு ஒன்று பிரிவது இல்லை தோட்டத்தில் செடிகளுக்கு நீர் பாய்ச்ச ஒரு தொட்டி இருக்கும் தொட்டியின்மேல் ஏறிக் கோழிகள் தண்ணீர் குடிக்கும் ஒரு நாள் பெட்டைக் கோழி தவறித் தொட்டிக்குள் விழுந்துவிட்டது சேவலால் அதற்கு உதவி செய்ய முடியவில்லை அப்போது அதன் எஜமானர் வெளியே போகப் புறப்பட்டார் சேவல் அவரிடம் ஓடி அவர் போவதைத் தடுத்தது அவர் காரணம் தெரியாமல் திகைத்து நின்றார் அந்தச் சமயத்தில் தொட்டிக்குள் சலசல என்னும் சத்தம் கேட்டது உடனே அவர் அங்குப் போய்ப் பார்த்தார். பெட்டைக் கோழி இறக்கும் நிலையில் இருந்தது அதைத் தண்ணீரிலிருந்து வெளியே எடுத்துக் காப்பாற்றினார் சேவலின் அறிவை வியந்தார்.

28. குமணன்

(நாடகம்)

சகோதரன்	பேராசையால்	பரிசு
உருகுகிறது	உண்டு	வரவில்லை
அருங்கவி	செய்வேன்	சிறப்பை
ஏராளமாக	புலவரே	இயல்பு
மெச்சக்கூடும்	காலத்தில்	பட்டங்கட்டி
அழிக்கிறான்	பாவியாய்	மறுத்தது
என்னாமல்	போலி	சந்தேகம்
நாட்டை	ஒப்பித்துவிட்டு	உடைவாள்

காட்சி-1

(குமணன் என்னும் அரசன், யாசிப்பவர்களுக்கு இல்லை என்னாமல் கொடுக்கும் ஒரு கொடையாளி. அவன் சகோதரன் அமணன். அமணனிடம் நாட்டை ஒப்பித்துவிட்டுக் குமணன் காட்டில் வசிக்கிறான். அமணன் பேராசையால் குமணனைக் கொன்றுவிட எண்ணி, குமணன் தலையைக் கொண்டு வருபவருக்குப் பெரும்பரிசு அளிப்பதாக வெளி-யிட்டிருக்கிறான். குமணனிடம் பெருந்தலைச் சாத்தனா என்னும் புலவர் போகிறார்.)

குமணன்: சாத்தனாரே, வாரும். எதற்காக இவ்வளவு தூரம் காட்டில் என்னைத்தேடிக்கொண்டுவந்தீர்?

பெரு.சா: அரசரே, நீர் ஒரு பெருங்கொடையாள என்பதைக் கேள்விப்பட்டேன்.

குமː நான் இப்போது அரசன் அல்லேன்; என் தம்பி அமணனே அரசன்.

பெரு. சாː அதைப்பற்றி என்ன? நான் தரித்திரத்தால் மிகவும் வருந்துகிறேன். நான் உண்டு இரண்டு நாளாயின. என் மனைவியும் மக்களும் பட்டினி கிடக்கிறார்கள். என் வீட்டு அடுப்பில் பூனை தூங்குகிறது.

குமː புலவரே, உம்மைப் பார்க்கும் போதே என் மனம் உருகுகிறது! நான் என்ன செய்வேன்! ஐயோ! நான் ஏராளமாகக் கொடுக்கும்படியான அந்தக் காலத்தில் நீர் வரவில்லை. இப்போது உமது கஷ்டத்தை நீக்கும் பாக்கியம் எனக்கு இல்லையே!

(தேம்பி அழுகிறான்.)

பெரு. சாː அரசரே, வருந்தாதீர்!

குமː இப்போது நான் பொருள் ஒன்றும் இல்லாமல் காட்டில் இருக்கும் போது நீர் வந்தீரே! உமது பெருமை யாருக்குத் தெரியும்?

பெரு. சாː அழாதீர், அரசரே, என்னைப்பற்றிக் கவலைப்பட வேண்டா.

குமː சரி; என் தலையைக் கொண்டுபோய்க் கொடுப்பவருக்கு என் தம்பி பெரும்பொருள் கொடுப்பதாகக் கூறியிருக்கிறானும். இதோ என் உடைவாள்! என் தலையை வெட்டிக்கொண்டு போய் அவனிடம் கொடும். அவன் கொடுக்கும் பொருளைப்

பெற்று உமது தரித்திரத்தை நீக்கிக்கொள்ளும்.

(வாளைக் கொடுக்கிறான்.)

பெரு. சா: (கையில் வாளை வாங்கிக்கொண்டு) வேண்டா. அரசரே, நான் வேண்டும்போது தலையை வாங்-

கிக்கொள்கிறேன். நான் இப்போது விடை பெற்றுக்கொண்டு போகிறேன்.

காட்சி-2

(சாத்தனார் வாழைத்தண்டினால் குமணன் தலையைப்போல ஒ[ரு] தலை செய்துகொண்டு, அமணன் சபைக்குப் போய்க் காட்[டு]கிறார்.)

அமணன்: புலவரே, இது என்ன?

பெரு. சா: இது உம் தமையனார் தலை. தெரியவில்லையா நீர் கூறியபடி பெரும்பொருள் கொடும்.

அம: உண்மையா! தன்னிடம் பணம் இருந்தால் அதைப் புலவர்களுக்குக் கொடுத்து அழித்தா[ன்]

என்றல்லவோ நான் இதுவரையில் நினைத்தேன்! தன் தலையைக்கூடவா புலவருக்குக் கொடுத்தான்! ஐயோ! என் அண்ணன் பெருமையை நான் அறியவில்லையே! நான் பெரிய பாவியாய்-விட்டேனே!

(அழுகிறான்)

பெரு. சா: குமணர் இது வரையில் ஒன்றையும் புலவ-ருக்குக் கொடுக்க மறுத்ததில்லை. உமக்குச் சந்தேகமானால், இதோ அவரது உடைவாளும் இருக்கிறது, பாரும்.

அம: சாத்தனாரே, என் தமையன் தலையை வெட்டிய வாளால் என் தலையையும் வெட்டிவிடும்! என் அண்ணன் இறந்த பிறகு, நான் உயிருடன் இருக்க மாட்டேன்!

(அழுகிறான்.)

பெரு. சா: அமணரே, வருந்தாதீர்! உம் மனத்தைச் சோதிக்கவே நான் இப்படிச் செய்தேன். இது உம் தமையனார் தலை அன்று.

அம: புலவரே, நீர் பொய் பேசுகிறீர்! நான் நம்ப-மாட்டேன்!

பெரு. சா: இது குமணர் தலையைப்போலச் செய்யப்-பட்ட ஒரு போலித் தலை. குமணர் உயிருடன் இருக்கிறார்.

அம: ஆனால், இதோ உம்முடன் நான் வருகிறேன். எனக்கு என் அண்ணனைத் தயை செய்து காட்டும்.

(புலவர் அமணனை அழைத்துச் சென்று குமணனைக் காட்டுகிறார்).

அம: அண்ணா, மன்னிக்க வேண்டும்! என் தப்பைப் பொறுத்துக்கொண்டு என்னுடன் நாட்டுக்கு வரவேண்டும்.

(காலில் விழுந்து வணங்குகிறான்).

குமணன்: தம்பி, அழாதே! தப்புச் செய்தல் எல்லார்க்கும் இயல்புதானே! உன் இஷ்டப்படியே இதோ வருகிறேன்.

(நாட்டுக்குப் போய்ப் பட்டங்கட்டிக்கொள்கிறான்.

பயிற்சி:

இந்த, நாடகத்தை உன் பள்ளிக்கூட அறையில் இன்னும் சில மாணவர்களோடு சேர்ந்து நடித்துக் காட்டு.

29. கடிதம்

பந்துக்கள்	சொன்னபடி	நமஸ்காரம்
பணிவாக	கவனியுங்கள்	வெயிலில்
மாதிரி	ஸ்டாம்பு	அலையாமல்

1. சிறுவர்களே, உங்கள் விடுமுறைக் காலங்களில் நீங்கள் உங்கள் பந்துக்கள் வீட்டுக்குப் போகின்றீர்கள் அல்லவா? அப்போது உங்களுடைய தாய் தகப்பனுருக்கு உங்கள் சௌக்கியத்தைப்பற்றிக் கடிதம் எழுத வேண்டாவா? அதற்காகக் 'கடிதம் எந்த மாதிரி

ஆரம்பிக்கவேண்டும்? எந்த மாதிரி முடிக்கவேண்டும்?' என்னும் விஷயத்தைப் பற்றிக் கவனியுங்கள்:

2. கடிதம் எழுதுவதற்கு உபயோகிக்கும் காகிதத்தின் தலைப்பில் வலப்பக்கத்தில் நீங்கள் இருக்கும் இடத்தின் பெயரும், எழுதும் தேதியும் முதலில் எழுத வேண்டும்.

3. பிறகு விஷயம் ஆரம்பிப்பதற்கு முன் உங்கள் தாய் தந்தையருக்கு வணக்கத்தைத் தெரிவிக்கவேண்டும். அதன் பின், எழுத விரும்பிய விஷயத்தை எழுத வேண்டும். விஷயம் எழுதி முடிந்த பிறகு, உங்கள் பெயரை எழுத வேண்டும்.

4. இப்படி எழுதின பிறகு கடிதத்தின் பின் புறத்தில் கடிதம் யாருக்கு எழுதுகிறீர்களோ, அவர்கள் விலாசம் எழுத வேண்டும். அதன் பின்பே தபால் பில்லை ஒட்டித் தபாற்பெட்டியில் போட வேண்டும். அடியில் மாதிரிக் கடிதம் ஒன்று கொடுக்கப்பட்டிருக்கிறது. அதில் மேலே கூறிய விஷயங்கள் இருக்கின்றனவா என்பதைக் கவனியுங்கள்:

12, ராஜவீதி,
திண்டிவனம்,
20-1-1953.

அன்புள்ள தந்தையாருக்கு அனேக நமஸ்காரம். நான் சௌக்கியமாய் இங்கு வந்து சேர்ந்தேன். நீங்கள் சொன்னபடி வெயிலில் அலையாமல் இருக்கிறேன். மாமாவுக்கு நான் வந்தது மிகவும் சந்தோஷமாய் இருக்கிறது. இங்கு எனக்குப் படிப்பதற்கு அனே

கதைப் புஸ்தகங்கள் இருக்கின்றன. வீண் பொழுது போக்காமல் நான் படிப்பேன்.

அனேக நமஸ்காரம்.
உங்கள் அன்புள்ள,
கிட்டு.

விலாசம்:
திருவாளர் கந்தசாமிப் பிள்ளை அவர்களுக்கு,
141, தங்கசாலை வீதி,
சென்னை-1.

30. அன்பு

(பாட்டு)

ஓடி விளையாடு பாப்பா!—நீ
ஓய்ந்திருக்க லாகாது பாப்பா!
கூடி விளையாடு பாப்பா!—ஒரு
குழந்தையை வையாதே பாப்பா! 1
சின்னஞ் சிறுகுருவி போலே—நீ
திரிந்து பறந்துவா பாப்பா!
வன்னப் பறவைகளைக் கண்டு!—நீ
மனத்தில் மகிழ்ச்சிகொள்ளு பாப்பா! 2
கொத்தித் திரியும் அந்தக் கோழி—அதைக்
கூட்டி விளையாடு பாப்பா!
எத்தித் திருடுமந்தக் காக்கை—அதற்கு
இரக்கப் படவேணும் பாப்பா! 3

பாலைப் பொழிந்துதரும் பாப்பா!—அந்தப்
பசுமிக நல்லதடி பாப்பா!
வாலைக் குழைத்துவரும் நாய்தான்;—அது
மனிதர்க்குத் தோழனடி பாப்பா! 4
வண்டி யிழுக்கும்நல்ல குதிரை;—நெல்லு
வயலில் உழுதுவரும் மாடு;
அண்டிப் பிழைக்கும்நம்மை ஆடு;—இவை
ஆதரிக்க வேணுமடி பாப்பா! 5
உயிர்க ளிடத்தில்அன்பு வேணும்;—தெய்வம்
உண்மையென்று தானறிதல் வேணும்;
வயிர முடையநெஞ்சு வேணும்;—இது
வாழும் முறைமையடி பாப்பா! 6

—பாரதியார்